தடைகளைத
தாண்டி
மீண்டும்...

www.tamilarangam.net



# வாலி + வைரமுத்து = ஆபாசம்

பாமரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

புதிய கலாச்சாரம்
தினமணி
திரு. அந்துமணி (தினமலர்)
தமிழன் எக்ஸ்பிரஸ்
குமுதம் ஸ்பெஷல்
உஷா
இனி
மானுட விடியல்
சமரசம்
பயனீட்டாளர் குரல்
நம் வாழ்வு
கேப்பியார்
பொம்மை
அரும்பு
இந்தியா டுடே
புதிய கல்வி
ஏவுகணை
தராசு
வாசுகி
திரு. சுஜாதா (கல்கி)...

உட்பட
நேசக்கரம் நீட்டிய
நெஞ்சங்களுக்கெல்லாம்....

எமது

ந
ன்
றி

www.tamilarangam.net

**இந்நிலை மாற**
**நம் இனம் வாழ**
**எண்ணுவோர்**
**எண்ணங்களை எழுத வேண்டிய முகவரி :**

**வாலி**
12 முதல் தெரு
கற்பகம் அவென்யு
ராஜா அண்ணா-
மலை புரம்
சென்னை - 600 028

**வைரமுத்து**
15 நான்காவது
குறுக்குத் தெரு
டிரஸ்ட் புரம்
சென்னை - 600 024

# செய்ய வேண்டியதை செய்தி சொல்லும்

ஆபாச சினிமாவை கண்டித்து பெண்கள் போராட்டம்

## சினிமா தியேட்டர் சூறையாடப்பட்டது

### படச்சுருள்களை நடுரோட்டில் போட்டு எரித்தார்கள்

மதுரை, டிச. 20- ஆபாச சினிமா படம் காட்டப்படுவதை கண்டித்து மதுரையில் பெண்கள் போராட்டம் நடத்தினார்கள். அப்போது அவர்கள் ஒரு சினிமா தியேட்டருக்குள் புகுந்து அடித்து நொறுக்கினார்கள். படச்சுருள்களை எடுத்து வந்து நடுரோட்டில் போட்டு தீவைத்து கொளுத்தினார்கள்.

இந்த பரபரப்பான சம்பவம் [illegible]

கூறப்பட்டு இருந்தது.

**தியேட்டருக்குள் புகுந்தனர்**

காலை 10.30 மணி அளவில் பெண்ணுரிமை கழகத்தை சேர்ந்த சுமார் 60 பெண்கள் திடீர் என்று [illegible] ரோட்டில் உள்ள இரண்டு சினிமா தியேட்டர்கள் முன்பு கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். பிறகு அவர்கள் தியேட்டருக்குள் புயல்போல புகுந்தார்கள்.

அந்த இரண்டு தியேட்டரும் [illegible]

ஆங்கில பட [illegible] எறிந்தனர்.

**பட சுருள் எரிப்பு**

இந்த கலாட்டாவில் சினிமா தியேட்டர் திரை கத்தியால் கிழிக்கப்பட்டது. ஆபரேட்டர் அறை சூறையாடப்பட்டது.

அங்கு இருந்த சினிமா படம் காட்டும் கருவிகள் கீழே தள்ளி விடப்பட்டன. இதனால் அவை சேதம் அடைந்ததாக தெரிகிறது.

**தீவைப்பு**

ஆபரேட்டர் அறையில் இருந்த சினிமா பட சுருள்களை ஆர்ப்பாட்டக் காரர்கள் வெளியே கொண்டு வந்தார்கள்.

அந்த பட சுருளை [illegible] ரவுண்டானா அருகே போட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் தீவைத்து கொளுத்தினார்கள்.

[illegible] விட்டார்கள்.

இதனால் அவர்களை பெண் போலீசார் குண்டுகட்டாக தூக்கி வேன்களில் ஏற்றினார்கள்.

**40 பெண்கள்**

இந்த போராட்டத்தை நடத்திய தமிழக பெண்ணுரிமை கழக தலைவர் [illegible], செயலாளர் கவிதா உள்பட 40 பெண்கள் கைது செய்யப்பட்டார்கள்.

பெண்களின் இந்த திடீர் போராட்டம் காரணமாக பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாலி + வைரமுத்து = ஆபாசம்

பாமரன்

www.tamilarangam.net

வாலி + வைரமுத்து = ஆபாசம்
பாமரன்

முதல் பாதிப்பு: 1996
இரண்டாம் பாதிப்பு: 2001

சேகுவேரா பதிப்பகம்
கோவை 641 002

அச்சு:
மணி ஆஃப்செட்
சென்னை 5

அட்டை வடிவமைப்பு:
மஹாகவி வரைகலை நிலையம்
கோவை 9
தொலைபேசி: 234699

தொடர்புக்கு:
586 திவான் பகதூர் சாலை
கோவை 641 002

விலை ரூ 25 / =

புதுசா எதுவும்
சேத்தலையா தலைவா...

இல்ல தலைவா...

முதல் பதிப்புக்காக
கேட்டுத் தொலைச்ச
கண்றாவிகளுக்காகவே
இன்னும் நான்
சட்டையப் பிச்சுக்கிட்டு
சுத்தறேன்...
அப்புறம் நான்
'கண்டபடி கட்டிப்புடி'க்க
வேண்டிவரும்...
அது தாங்காம
மத்தவங்க 'அய்யோ
பத்திக்கிச்சு
பத்திக்கிச்சு'ன்னு
ஓடவேண்டிவரும்...
எதுக்கு வீண் வம்பு...?

www.tamilarangam.net

# “நடப்பதே வேறு...”

வாலி என்ற அயோக்கியன் எழுதியிருக்கிறானே ‘சக்கரவள்ளிக் கிழங்கு’ என்ற பாடலை - அந்தப் பாடலை விடலைப் பையன்கள் பாடும்போது எங்கள் இனத்துப் பெண்கள் அவமானத்தால் கூனிக் குறுகிப் போகிறார்கள். அந்தப் பாட்டை எழுதியவன், படமாக்கியவன், பொறுப்பான டைரக்டர், பணம் போட்ட முதலாளி அனைவரையும் முச்சந்தியில் நிறுத்தி சவுக்கால் அடித்தால்கூட தவறில்லை. இந்த வாலி, வைரமுத்து போன்ற கவிஞர்கள் வாழுகின்ற காலத்தில் எவ்வளவு ஓஹோ என்று வாழ்ந்தாலும் இவர்கள் போன பின்பு இவர்கள் இருந்த திசையைத் திரும்பிப் பார்க்க ஒரு சொறிநாய்கூட இருக்காது.

**- பேராசிரியை சரசுவதி**

இந்த நூலுக்குப் பின்தான் ‘இந்தியன்’ படம் வந்திருக்க வேண்டும் என நினைக்கிறேன். அதில் வரும் ‘அக்கடா’ ‘துக்கடா’ ‘ராத்திரி’ ‘போக்கிரி’ வரிகளைத் தவிர வேறு எதுவும் புரியவே இல்லை. பாடலில் அடுத்ததாக வரும் அக்கறைக்குரிய விஷயம் ‘தடா’. தடா அவ்வளவு கேலியான செய்தியா? மிகக் கடுமையாக கவலை கொள்ள வேண்டிய சிக்கல்கள் எல்லாம் கேலிப் பொருட்களாக்கப் படுகின்றன. தடா அவ்வளவு கேலிக்குரியதா? பூந்தமல்லி சிறைச்சாலையில் மூன்றாண்டுகளுக்கும் மேலாக விசாரணையின்றி, தனிமைச் சிறையில் அடைபட்டுள்ள எம் இளைஞர்களைப் போய்க் கேள். தடா அவ்வளவு எளிமையா இல்லையா என்று. தடா கேலிக்குரியதா இல்லையா என்று தெரியும். உங்களுக்கு என்னென்ன நுட்பங்களும், வித்தைகளும் தெரியுமோ அத்தனை நுட்பங்களும் வித்தைகளும் தெரிந்தவர்கள் புறப்பட்டு வருகிறார்கள் என்பதற்குச் சான்று பாமரனுடைய இந்த எழுத்து. வருவார்கள். உங்கள் இடத்திற்கு நாங்கள் வருவோம். ஒரு புதிய அரசியலோடு. அதிலே போலித்தனம் இருக்காது. அப்படி ஒரு புதிய இலக்கியத்தைப் படைக்க முடியும். நம்மைவிட மிகச் சிறிய தேசம். அவர்கள் நம்மவர்கள் என்பதிலே பெருமை. நம்முடைய ஈழத்தமிழர்கள் படைத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களைப் போற்றுவதும் பாராட்டுவதும், அவர்களது போர்க்கள வெற்றிகளுக்குக் கரவொலி எழுப்புவதும் மட்டுமே நமது வேலையல்ல. அவர்களிடமிருந்து போராட்டக் கலையை மட்டுமல்ல, கலைப் போராட்டத்தையும் கற்றுக்கொள்வோம்.

**- தியாகு, தமிழ் - தமிழர் இயக்கம்.**

என்னுடைய ஆசை என்னவென்றால், ஐந்து வருடத்திற்கு சினிமாவே தமிழ் நாட்டில் எடுக்கக் கூடாது என்று ஒரு சட்டம் போடவேண்டும். இவர்கள்

www.tamilarangam.net

திருந்துவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இல்லை. நாம் இதைக் கடுமையாக எதிர்க்க வேண்டும். இவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும்.

**- டாக்டர் ச. ராமதாஸ், நிறுவனர் - பாட்டாளி மக்கள் கட்சி.**

தவறைத் திருத்திக் கொள்கிறேன் என்பதுதான் தலைவர்கள் உட்பட யாருக்கும் பெருந்தன்மைக்குரிய விஷயம். இதில் தொடர்புடைய இயக்குநர்கள், நடிகர்கள் எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. ஆனால், கவிஞர்களுக்கு கூடுதல் பொறுப்பு இருக்கிறது. இங்கு ஒரு வேண்டுகோளை - ஒரு எச்சரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

வேண்டுகோள் இது: போனது தொலையட்டும். ஆயிற்று... எழுதி, பாட்டாகி வெளிவந்துவிட்டது. இனிமேலாவது நிறுத்துங்கள். காசுக்காக எதையும் எழுதுகிற கயமையை இனிமேலாவது நிறுத்துங்கள்.

எச்சரிக்கை இது: நிறுத்தாவிட்டால், நிறுத்தவைக்கவேண்டிய கட்டாயம் எங்களுக்கு நேரும்.

**- பேராசிரியர் சுப. வீரபாண்டியன்.**

நமக்கு எப்படி தமிழ் உணர்வு முக்கியமோ... அந்த அளவிற்கு பகுத்தறிவும், பெண்களை மதிப்பது என்ற பார்வையும் முக்கியம். பெண்ணை சரியான பார்வையில் பார்க்கத் தெரியாவிட்டால் நாம் பேசும் இன உணர்வு, சுயமரியாதை இவற்றுக்கு அர்த்தமேயில்லை. இன உணர்வும் சுயமரியாதையும் ஆண் இனத்துக்கு மட்டுந்தானா? அந்தத் தமிழ் இனத்திலே பெண்கள் இல்லையா? தந்தை பெரியாரோடு இருந்த, அவருக்குப் பின் வந்த எழுத்தாளர்கள் பலரும், பண்டிதர்களும் இன்னும் திருந்தவேயில்லை. தந்தை பெரியார் அவர்கள் பெண்களுக்கான பிரச்சனையைப் பற்றி எழுதும்போது... 'இவ்வளவு புத்தகம் எழுதறீங்க. ஒரு காவியம் எழுதறீங்க. இதுல ஐம்பது வரி அந்தப் பெண்ணுடைய சாயலை, அழகை, உடையை, ஒப்பனையைப் பற்றி எழுதினால்.... ஐந்து வரியாவது அந்தப் பெண்ணுடைய அறிவை, திறமையை, அவளால் இந்த நாட்டுக்கு உண்டாகும் பயனைப் பற்றி எழுதுகிறீர்களா...?' என்று கேட்கிறார்.

பேராசிரியர் சுபவீ. அவர்கள் விடுத்த அந்த எச்சரிக்கையை நான் இயக்குநர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும், இசையமைப்பாளர்களுக்கும் சேர்த்தே சொல்லுகிறேன்:

'நடப்பதே வேறு...' என்று நீங்கள் சொன்னதை
நாங்கள் சொல்லும்படி வைத்துவிடாதீர்கள்.

**- வழக்குரைஞர் அருள்மொழி.**

***(4.8.1996 அன்று சென்னை ஜெர்மன் அரங்கில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் பேசிய உரைகளில் இருந்து...)***

www.tamilarangam.net

முன்னுரை



திருமதி திலகவதி

# நஞ்சு கலக்குகிற கொலை பாதகச் செயல்

திரைப்படப் பாடல்கள் மக்களிடம் பெற்றுள்ள செல்வாக்கும் அது அவர்கள் வாழ்வு நெறியின் மீது செலுத்தும் ஆதிக்கமும் நாம் நினைப்பதைக் காட்டிலும் வலிமையானவை: கூர்மையானவை: ஆழமானவை.

அதனாலேயே சமூகம், மக்கள் மேன்மை ஆகியவை பற்றி அக்கறையும் கவலையும் கொள்ளும் எவரும் திரைப்பட பாடல்களைக் குறித்து கவலையும் அக்கறையும் கொண்டாக வேண்டியிருக்கின்றது.

மெட்டுக்குப் பாட்டெழுதுவதன் கஷ்டம், நல்ல பாடல்களுக்கு வழிவிடாத கதையம்சம் என்றெல்லாம் நீக்குத்தாக்கான சாக்குப் போக்குகள் சமாதானமாகச் சொல்லும் பாணி கலைஞர்களின் கைகளில் என்றும் தீராதிருக்கிற ஸ்டாக்.

“சினிமா என்பது என்ன தமிழ் வளர்ச்சிக் கழகமா?” அல்லது என் புலமையைச் சோதிக்கின்ற சங்கப்பலகையா? தரை டிக்கட்டுகளைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குஷிப்படுத்தத்தான் எனக்குக் காசு கொடுக்கிறாங்க. அந்தத் தரை மகா ஜனங்களுக்கு,

*''தில்லா டாங்கு டாங்கு*
*திருப்பிப் போட்டு வாங்கு''* என்று எழுதாம

*''வண்டார் குழல் பூச்செண்டாட*
*அழகு கொண்டாட''* என்றா எழுத முடியும்?

என்று கேட்ட தஞ்சை ராமையாதாசும் தன் இறுதிக்காலத்தில், தான் பாட்டு எழுதாமல் தன்பாட்டுக்கு எழுதியதைச் சொல்லி வருந்தியதை தமிழ்த்திரை வரலாறு பதிவு செய்து வைத்திருக்கின்றது. இதை இன்றைய பாடல் ஆசிரியர்கள் புரிந்து கொள்வது அவர்களுக்கும், தமிழர்க்கும், தமிழுக்கும் நல்லது செய்யும்.

திரைக்கதையை நகர்த்திச் செல்ல எவ்விதத்திலும் உதவாத, அவசியமில்லாத இந்தப் பாடல்கள், மக்கள் ரசிக்கிறார்கள் அல்லது மக்களுக்குப் பழக்கமாகி விட்டது அல்லது மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்கிற காரணத்துக்காகவே படங்களில் இடம் பெறுகிறது என்பதை இப்பாடல் ஆசிரியர்கள் நன்கு உணரவேண்டும். அப்படி உணர்ந்தால், தங்கள் வளர்ச்சிக்கும், செல்வத்துக்கும், செல்வாக்குக்கும், தாங்கள் சாப்பிடும் சாப்பாட்டுக்கும், வசிக்கிற மாளிகைக்கும், பயணம் செய்கிற காருக்கும், காருக்குப் போடுகிற பெட்ரோலுக்கும் ஆதாரமாக இருக்கிற மக்களுக்குத் தாங்கள் எவ்வளவு கடன்பட்டிருக்கிறார்கள் என்ற பிரக்ஞை தோன்றும்.

*''கொட்டப்பாக்கும் கொழுந்து வெத்தலையும்*
*போட்டா வாய் சிவக்கும்*
*மச்சான் நீயும் மச்சினி நானும்*
*தொட்டா தூள் பறக்கும்''*

என்பது போன்ற விரசங்களைத் துப்பும் முன் அவர்களின் பேனா சற்றே நிதானிக்கும் - நாணித் தலை நிமிரும்.

சினிமாவுக்குப் பாட்டெழுதுபவர்களுக்கு அவற்றின் மூலம் மக்கள் மனதிலே லட்சியங்களை விதைக்கிற கடமை இருக்கிறது. மக்கள் வாழ்க்கைக்கு உதவாத சினிமாவை தீக்குச்சிகளுக்கு தின்னத் தரத் துடிக்கிற இளைஞர்கள் இன்னும் செத்துவிடவில்லை. அவர்கள் லட்சியங்களும் அவ்வாறே.

சில்லறை சேர்ப்பதையே நோக்கமாகக் கொண்டவர்களா சினிமாப் பாடல் ஆசிரியர்கள்? கேளிக்கை படைப்பதும் கிளுகிளுப்பூட்டுவதும் தானா அவர்களது வேலை? இந்தக் காரியங்களை இவர்கள் செய்ய நேர்ந்ததற்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரணங்களை அழகிய சொற்பிரயோகங்களுடன் தருவதனாலும், அறிவுக்குகந்த விதத்தில் நியாயப்படுத்துவதாலும் இன்றைய பாடலாசிரியர்கள் மீது சுமத்தியிருக்கின்ற பழி அகன்று விடுமா? எல்லாக் காலங்களிலும் பாடலாசிரியர்கள் இப்படித்தான் இருந்தார்களா?

தமிழ்த் திரைப்பாடல்களின் முதல் குரலாக ஒலித்த மதுரகவி பாஸ்கரதாஸ் அதிகப் படிப்பில்லாதவராக இருந்தாலும் தன் காலத்தின் தீமைகளை எதிர்த்துக் குரல் கொடுப்பது கலைஞனின் தர்மம் என்றே கருதினார். தேச பக்தி, தெய்வ பக்தி இவை தவிரவும் தொழிலாளர் நிலை பற்றி,

*'ஓடோடிப் பாடுபட்டு உழைத்தேன்*
*ஓகோபேய்ப் பிழைப்பு பிழைத்தேன்''*

என்று சுயவிமரிசனம் செய்து கொள்ளும் தொழிலாளி, கடைசியாக

*''காசெல்லாம் யாருக்கோ போகுது*
*யோசிக்கத் துக்கமே ஆகுது''*

என்று முடிப்பதாக எழுதியிருந்தார்.

1915-ல் பாட்டெழுதத் தொடங்கிய அவர் அந்தக் காலத்திலேயே, பொருந்தா மணத்தைக் கடுமையாகச் சாடியிருக்கிறார்.

*''மவுசாகச் சிறுபெண்ணை*
*மணம்புரியும் மாப்பிள்ளையை*
*மண்ணைத் தோண்டிப் புதைக்க வேணும்*
*எண்ணெய் ஊற்றி எரிக்க வேணும் சகியே''*

என்று தீக்கங்குகளை வார்த்தைகளாகக் கோர்த்துக் கொட்டியிருக்கிறார். இன்றைய படித்த பாட்டுக்காரர்களோ, ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள ஒருவன் ஆணாக மட்டுமே இருந்தால் போதுமானது என்கிற பாமரச் சிந்தனையையே தங்கள் பாடல்களில் கூச்சமின்றி வெளிப்படுத்துகிறார்கள்.

படிப்பில்லாதவன் என்பதால் கதாநாயகனை மணக்கத் தயங்குபவளை எண்ணி அவன் பாடுவதாக வரும் 'தாய்மாமன்' படப்பாடல்,

*''காளை மாட்டுக்கு காம்பெதுக்கு*
*கன்னி கழிக்க படிப்பெதுக்கு*
*சிங்கம் நடக்க செருப்பெதுக்கு*
*சேலை தொடத்தான் படிப்பெதுக்கு''* என்கிறது.

www.tamilarangam.net

இருபத்தோராம் நூற்றாண்டின் நுழைவாயிலில் இப்படி ஒலிக்கிற அபத்தத்துக்கு எங்கே போய் முட்டிக் கொள்வது?

விசாரித்தால்... அது கதாபாத்திரத்தின் குரலென்ற ''அறிவார்ந்த'' பதில் கிடைக்கும். கதாபாத்திரங்கள் படைப்பாளனின் கைப்பதுமைகளேயல்லவா? அப்படியிருந்ததால்தானே ராஜாக்கள் நடமாடும் கதையிலேகூட பாடலாசிரியர் லட்சுமணதாஸ்,

*உழைப்பதிலா இன்பம் உழைப்பைப் பெறுவதிலா இன்பம்*
*உண்டாவதெங்கே சொல் என் தோழா?*
*உழைப்பவரே உரிமை பெறுவதிலே - இன்பம்*
*உண்டாகுமென்றே சொல் என் தோழா*
*கல்வி கற்றோம் என்ற கர்வத்திலே இன்பம்*
*கண்டவருண்டோ சொல் என் தோழா?*
*கல்லாத பேரையெல்லாம் கல்வி பயிலச் செய்து*
*காண்பதில்தான் இன்பம் என் தோழா''*

என்று பொதுவுடைமை பறைசாற்றும் பாடலைத் தந்தார்.

திராவிட நாடு கோரிக்கை வலுப்பெற்றிருந்த காலத்தில் வந்த பல படங்களும் கதைப்போக்கையொட்டி நின்ற கால, தேச வர்த்தமானங்களைத் தாண்டி தங்களுடைய கட்சியின் கொள்கைகளையே பன்னிப்பன்னிப் பேசியது என்பது சமீபத்திய வரலாறு. 'மாலையிட்ட மங்கை' போன்ற சமூகப் படத்திலே,

*''சிங்களத் தீவின் கடற்கரையை - எங்கள்*
*செந்தமிழ்த்தோழர் அழகு செய்தார்*
*எகிப்திய நாட்டின் நதிக்கரையில் - எங்கள்*
*இளம் தமிழ் வீரர் பவனி வந்தார்''*

என்று கதாநாயகன் பாடுவதாக கண்ணதாசன் பாடல் அமைத்திருந்தார்.

இது எப்படிச் சாத்தியப்பட்டது? இதற்கான முன்னோடிகளாக விஸ்வநாததாஸ் போன்றோர் இருந்ததால்தான் இது சாத்தியப்பட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தடியடி, அடி, உதை, சிறைவாசம் போன்ற சொல்லொணாக் கொடுமைகளுக்கு நடுவிலும் தாங்கள் கையாண்ட கலை வடிவங்களின் வழியே சமூகத்துக்கு நல்லது எதுவோ அதைத்தான் சொல்ல வேண்டும் என்ற உத்வேகத்துடன் செயல்பட்டவர்கள் விஸ்வநாததாஸ் போன்றவர்கள். தேச பக்திப் பாடல்களைப் பாடியதற்காக ஒரு தடவையல்ல இரண்டு தடவையல்ல இருபத்தியோரு தடவைகள் சிறை சென்றவர் அவள்

www.tamilarangam.net

விஸ்வநாததாஸ் என்பதையும் நாம் இங்கு நினைவு கூற வேண்டும்.

இத்தனைக்கும், அந்த நாடகக் கலைஞர்கள் மிகக் குறைவான படிப்பறிவே உடையவர்கள். சிலர் கேள்வி ஞானத்தால் மட்டுமே கலைஞர்களாக ஆனவர்கள். போராளிகளாக வாழ்ந்தவர்கள். நாடக அரங்கினுள் நுழையும்போதே பகத்சிங் போன்ற தலைவர்களின் உருவப்படம் பதித்த பேட்ஜ்களை அணிந்து கொண்டு பிரவேசித்தவர்கள் - ஏகாதிபத்திய எதிர்ப்புக் கனலைக் கொழுந்து விட்டெரியச் செய்தவர்கள் - பாமர மக்களை வீறுகொண்டு எழச் செய்தவர்கள்.

'வள்ளித் திருமணம்' நாடகத்தில் தினைப்புனம் காவல் காக்கும் வள்ளி,

*''தேம்ஸ் நதிக்கரையிலே குஞ்சு பொரித்து*
*இந்தியா எங்கும் சுற்றிப் பறந்து திரிந்து*
*இன்னல் பல செய்யும் வெள்ளைக் கொக்கே''*

என்று அரசியல் வண்ணம் பூசி கொக்கை விரட்டுவாள்.

கொதித்தெழும் மக்களின் மீது பாய்ந்த அடக்குமுறைச் சட்டத்தை எதிர்த்து அந்த நாடக மேடைக் கலைஞர்கள் குரல் கொடுத்தார்கள்.

*''சிறைக்குள்ளிருந்து மனமே களிப்படையும்*
*சிலர்க்கில்லை விசனமே - எப்போதுமே.*
*கலெக்டரும் கடவுளல்ல - அடிமைப்போலீஸ்*
*கான்ஸ்டபிள் எமனுமல்ல - உயிரைக்கொல்ல''*

என்று வீரஞ்செறிந்த ஆவேசத்துடன் ஒருமிக்கக் குரல் கொடுத்தார்கள்.'

அடிமைத்தனம், மிடிமை, வறுமை, அறியாமை, பஞ்சம், பிணி, பட்டினி ஆகியவற்றிலேயே உழன்ற அந்த பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழர்கள் ரியலிசம், கண்டினியுட்டி ஆகியவை பற்றிய கவலையில்லாமல் இத்தகைய நாடகங்களைப் பார்த்து, புரிந்துகொள்ள வேண்டியவற்றைப் புரிந்து கொண்டார்கள்.

தினைப்புனத்தில் தேம்ஸ் நதிக்கொக்குகள் எப்படி வந்தன என்று அவர்கள் திண்டாடிப் போகவில்லை. அரிச்சந்திரன் நாடகத்தில் பகத்சிங்கும், பஞ்சாப் படுகொலையும் எப்படி வந்தன என்று அவர்கள் திணறிப் போகவில்லை.

அந்த வள்ளி காவல் காத்தது வெறும் தினைப்புனம் அல்ல; தேசம்.

www.tamilarangam.net

துரத்தித் துரத்தி அடித்தது பறவைகளை அல்ல; ஏகாதிபத்தியக் கொக்குகளை என்பது மக்களுக்கு நன்கு விளங்கியது.

பாத்திரப் படைப்பில் கவனம் செலுத்துவதான பாவனையை யார் நம்புவார்? பிரசவித்திருக்கிற தங்கையையும், அவள் கணவனையும் குறித்து உடன் பிறந்தானும், உற்றாரும், உறவும் யதார்த்தத்தில்,

*''பச்ச உடம்புக்காரி பார்த்து நடக்கச் சொல்லுங்க*
*பிள்ளைக்கு தாய்ப்பால தூக்கிக்கொடுக்கச் சொல்லு*
*மச்சான திண்ணையிலே போத்திப் படுக்கச் சொல்லு''*

என்று சொல்லுகிற அநாகரீகத்தை எந்த யதார்த்தத்தில் சேர்த்துக் கொள்வது? இது எந்தப் பாத்திரத்தைச் செதுக்குகிற, சித்தரிக்கிற சரியான படைப்பு?

'பெண்' எனும் கருத்தாக்கத்தின் மீது எவ்வளவு இழிவான சிந்தனைகளை இன்றைய சினிமாப் பாடல்கள் சுமத்துகின்றன. பெண் வாழ்வின் எல்லாப் படிநிலைகளிலும் அவளை எவ்வளவு கேவலத்துக்கு ஆளாக்குகின்றன. எந்தெந்த எண்ண வீச்சுக்கள் எல்லாம் பெண் வாழ்வின் துயரை நிலைப்படுத்துமோ அவற்றையே மீண்டும் உரத்துச் சொல்கின்றன இச்சினிமாப் பாடல்கள்.

பெண்களின் கண்ணீர் மறைய வேண்டும். அவர்களும் மானுடத்தின் சரிபாதி அங்கமாக வாழ வேண்டும் என்று கருதிய கவிஞன் என்பதால்தான் பாரதி,

*''நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்*
*ஞான நல்லறம் வீர சுதந்திரம்*
*பேணு நற்குடிப் பெண்களின் குணங்களாம்''*

என்றான்.

*''அச்சமும் நாணமும் இல்லாத பெண்கள் - அழகிய*
*தமிழ்நாட்டின் கண்கள்''*

என்றார் பாரதிதாசன்.

ஆனால், இந்தத் துணிச்சலான கருத்து சொல்லப்பட்டு ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று தலைமுறைக் காலத்துக்குப் பின் இன்றோ,

*''நான் கூச்சம் மிகுந்த சங்கத் தமிழ் நாட்டுப்பொண்ணு*
*என்னை மட்டும் பார்க்கும் பொண்ணு நானு*
*குளத்தில குளிக்கையில கொக்கு என்னை பார்க்குமின்னு*

www.tamilarangam.net

*குத்தவச்சி குளிக்கும் பொண்ணு நானு*
*தாய் வழியே நாணம் கண்ட தமிழச்சி நானு*
*அந்த சரித்திரத்து கண்ணகிக்கு தங்கச்சி நானு''*

என்கிறது 'தமிழச்சி' படப்பாடல்.

பெண் வாழ்வின் மீது எத்தகைய எதிர்பார்ப்புக்களை சுமத்துகிறது இப்பாடல்?

முற்போக்கு என்பதும் விஞ்ஞான மயம் என்பதும் மொழியில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன என்பதை எண்ணிச் சொல்வதிலும் உடம்பில் உள்ள நரம்புகளைப் பற்றிய புள்ளி விவரங்களை அள்ளித் தெளிப்பதிலும் இல்லை. அது-

எதிர்காலத்துக்குரியவர்களாக மக்களை இன்றே தயாரிக்க வேண்டிய கலைஞன் தனது கடமையைப் புரிந்துகொள்வதில் இருக்கிறது.

*'அச்சம், மடம், நாணம், அவளுக்காம், அவை தவிர்ந்த*
*மிச்சமிருக்கின்ற வெறியெல்லாம் இவனுக்காம்'*

என்று தணிகைச் செல்வன் கசந்து சொல்லியதைப் போல கற்பையும், மானத்தையும் பெண்களுக்கு மட்டும் உரியதாக்கும் இத்தகைய பாடல்கள் என்னதான் சொல்கின்றன? ஆண்களுக்கு அவை தேவையில்லையென்றா?

*விடிகாலை விண்ணழகு,*
*விடியும் வரை பெண்ணழகு*
*தமிழுக்கு 'ழ' அழகு*
*தலைவிக்கு நான் அழகு''*

என்றும்

*''அவரைக்குப் பூ அழகு, அவருக்கு நான் அழகு''*

என்றும் வர்ணனை செய்யப்படும் பெண்ணின் அழகு பரிதாபத்துக்குரியது.

'விடியும் வரை பெண்ணழகு' என்பது விரசமில்லையா? அத்தகைய எண்ணம் ஆணின் கண்ணியத்தைக் குலைப்பதல்லவா? அவரைக்குப் பூ அழகு என்பதில் 'அ' வும் 'அ'வும் பொருந்திப் போவது தவிர வேறு என்ன பிரமாதமான அழகு இருக்கிறது? என் கண்ணுக்கு அவரைப் பூ அழகுதான் என்று யாராவது வீம்பு பிடிக்கலாம். ஆனால் அவரைக்கு காய்தான் அழகு என்பதே பசித்தவன் காணும் பயன்பாடாகும். அவரைக்கொடி வளர்த்த என்று

www.tamilarangam.net

விவசாயியின் கண்ணுக்கு அழகாகத் தெரிவது அறுவடைக்குப்பின் அம்பாரமாகக் கிடக்கும் அவரைக்காய்தானே தவிர, பூ அல்ல.

இந்த எளிய விஷயம் பின்னுக்குத் தள்ளப்பட்டு அழகு, அழகு என்ற வார்த்தையை அடுக்கிச் செல்லும் முயற்சியில் 'சிந்தனை' வழுக்கி தடம் மாறிப் புரண்டு விடுகிறது பாடலாசிரியருக்கு. பெண்களை உடல் பரமாக வர்ணித்து, உறுப்பு நலம் உரைக்கும் புளித்துப்போன பாணியேயன்றி இது வேறென்ன?

பெண்ணை ஓர் உயிராக மதிக்கிற ஒரு மனிதன் ஒரு போதும் எவ்வளவு வேடிக்கையான மனநிலையிலும்,

*''அழகுப் பெண்ணின் தாயார் என்றால்*
*அத்தை என்றே அர்த்தம்''*

என்று கூறமாட்டான்.

*''அடி பூத்து நிக்கற பாப்பா*
*உன்னை பொண்ணு கேட்டா தப்பா*
*ஒன்னை நெனச்சுப் படுத்திருந்தேன்*
*கிழிஞ்சு போச்சு ஜிப்பா''*

என்று ஓர் இளைஞன் இளம் பெண்ணை நோக்கிப் பாடுவது யாருக்காவது கௌரவம் தருவதாகுமா?

முன்னாளில் வள்ளுவரும், பின்னாளில் கவிஞர் சுரதாவும் சொன்னது போல மலரினும் மெலிதான காதல் நமது திரைக்கவிஞர்கள் கையில் இந்தப்பாடுபடுகிறதே.

பாடலாசிரியர் பூமிபாலகதாசைப் போல

*''செங்கறபவள விரலோடு கால்கள் தெரிகுவது - ஓர்*
*தங்கப்பதுமை சாய்ந்தே கிடந்த தகைமையதே''*

என்று சொல்லாவிட்டாலும் பரவாயில்லை.

*''நிலவின் நிழலோ உன்வதனம் - புது*
*நிலைக்கண்ணாடியோ மின்னும் கன்னம்*
*மலையில் பிறவா மாமணியே - நான்*
*கொய்யும் கொய்யாக்கனியே''*

www.tamilarangam.net

கவிஞர் சுரதாவைப் போல கவிதையாக இசைக்காவிட்டாலும் பரவாயில்லை.

*''ஆடைகட்டி வந்த நிலவோ - கண்ணில்*
*மேடைகட்டி ஆடும் எழிலோ - குளிர்*
*ஓடையில் மிதக்கும் மலர்*
*ஜாடையில் சிரிக்கும் இவள்*
*காடுவிட்டு வந்த மயிலோ - நெஞ்சில்*
*கூடு கட்டி வாழும் குயிலோ''*

என்று பட்டுக்கோட்டை பாணியில் கௌரவப்படுத்தாவிட்டாலும் பரவாயில்லை.

*''வெள்ளாமை நீதான் வெள்ளாடு நான்தான்''*

என்று தீனியாக்காமல்

*''கொங்குநாட்டுக் கிணறுபோல*
*குமரி மனசு ஆழம்தான்*
*கொடைக்கானல் மூங்கில்போல*
*அய்யா கை நீளம்தான்''*

என்று கொச்சைப்படுத்தாமலாவது இருக்கலாமே.

நல்ல கலைஞன், தனக்கு வாய்த்திருக்கிற வடிவங்களின் மூலம் மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களையே சொல்வான். இளையராஜா சகோதரர்கள் மாட்டு வண்டி போகாத ஊர்களுக்கும் தங்கள் பாட்டுவண்டியை அனுப்பிக் கொண்டிருந்த அந்தக் காலத்திலே அவர்களுடைய மூத்த சகோதரர் பாவலர் வரதராஜன் கருத்தடைச் சாதனமாக பயன்படுத்தப்பட்ட ''லூப்'' ஏற்படுத்தும் உடல் நலக்கோளாறுகளை உணர்ந்து அவற்றை எதிர்த்தார். அதே உணர்வை மக்கள் மனதிலும் தூண்டினார். அதற்காக அவர் ஏற்றுக்கொண்ட மெட்டு அன்றைய மெகா ஹிட்டான 'ஆராதனா' படப்பாடல் 'ரூப்பு தேரா மஸ்தானா'தான். அதனையே வரதராஜன்,

*''லூப்பு தர்றான்*
*சரிதானா*
*மாட்டலேன்னா*
*விட்றானா''*

என்று பாடினார்

www.tamilarangam.net

**இன்றைய கவிஞர்களின் கம்ப்யூட்டர் காலத்து சிந்தசைசர் இசையோ,**

*''அஜக்குன்னா அஜக்குதான்*
*குமுக்குன்னா குமுக்குத்தான்''*

**என்று தஞ்சை ராமையதாஸ் காலத்து**

*''ஜாலிலோ ஜிம்கானா''* **வையே தலைகுனியச் செய்கிறது.**

*''தங்கமே தமிழுக்கில்லை தட்டுப்பாடு''* **என்று**
**வீராப்பு ஒரு புறம்,**

*''ஜுராசிக் பார்க்கில் நின்று சுகமான ஜோடிகள்*
*ஜாஸ் மியூசிக் பாடி வருது*
*பிக்காசோ ஓவியந்தான் பிரியாமல் என்னுடன்*
*டெக்சாசில் ஆடி வருது கவ்பாயின் கண்பட்டதும்*
*பிளேபாயின் கை தொட்டதும்*
*உண்டான செக்சானது ஒன்றாக மிக்சானது''*

**என்று செந்தமிழ் கொஞ்சும் சந்தங்களில் துள்ளும் பாடல் மறுபுறம்.**

**இளைஞர்களின் ''இன்னொரு தேசிய கீதமாக'' இன்றைக்கு ஒலிப்பது ''டேக் இட் ஈஸி பாலிசி''தான். ''கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே'' என்று கொதித்த பாரதிதாசன் பேரன்ற கவிஞர்கள் கற்பனை செய்ய முடியாத அற்புத மந்திரம் இன்றைய இளைஞர்களின் நாவிலும், மனதிலும், மூளையிலும் பதிந்திருக்கின்ற 'டேக் இட் ஈஸி பாலிசிதானே? அதிலும் முக்கியமாக எதைச் சுலபமாக எடுத்துக் கொள்வதாம்?**

*''பக்கத்து சீட்டில் பாட்டி உட்கார்ந்தா டேக் இட் ஈஸி பாலிசி''* **யாம். அதுசரி இது நகைச்சுவை என்றால் அவலச்சுவை எது?**

*''அச்சம் என்பது மடமையடா''*

*''ஏர் முனைக்கு நேர் இங்கு எதுவுமே இல்லை''*

*''தூங்காதே தம்பி தூங்காதே''*

*''மனுசனை மனுசன் சாப்பிடறான்டா தம்பிப்பயலே இது*
*மாறுவதெப்போ தீருவதெப்போ நம்ம கவலை''*

**என்றெல்லாம் ஒலித்த பாடல்கள் எத்தனையோ மன மாற்றங்களைத் தோற்றுவித்திருக்கின்றன.**

www.tamilarangam.net

இன்றைய பாடல்கள் காட்டும் வாழ்க்கை - மீன் பிடித்து மீண்டும் ஆற்றில் விடும் வெட்டித்தனத்தையும், தங்க மழை தானாய் பொழிய வேண்டும் என்ற ஆதங்கத்தையும், நிலவில் மழை பெய்வதும், சூரியனுக்குச் சுண்ணாம்பு அடிப்பதும், நட்சத்திரங்களுக்குப் பெயிண்ட் பூசுவதும், வானவில்லை கொசுவி வைக்கவுமான அதீத ரொமாண்டிக் கற்பனைகளை இளைஞர்கள் மனதில் வளர்த்து, யதார்த்தத்திலிருந்து அவர்களை அந்நியப்படுத்தி, நிஜ வாழ்வை எதிர்கொள்ளும் வலிமையற்றவர்களாக்கி, அவர்களை கனவுகளுக்குள் போட்டுக் கரைக்கிற மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்கின்றன.

இன்றைய கவிஞர்களின் பாடல்களில் நல்ல பாடல்கள் இல்லவே இல்லையா என்று கேட்கலாம். இருக்கும். சிலவற்றைப் பட்டியல் போட்டுக் கூட காட்டலாம். ஆனால் அதற்கு மாறான பட்டியல் அதைக்காட்டிலும் நீளமாக இருக்கிறது. அவைகள் நாகரீகமான சபையில் மேற்கோள் காட்டப்படக் கூட அருகதை இல்லாதவை. இங்கே குறிக்க வேண்டி வந்த சில பாடல்களுக்காகவே நான் கூசிப் போகிறேன். ஆயினும் கடமை கருதி அதைச் செய்துள்ளேன்.

பெண்களைக் கேலி செய்து பாடும் பாடல்களும் அவ்வாறே.

*''ஆடவாங்க அண்ணாத்தே''*

*''பாரப்பா பழனியப்பா''*

என்று கேலி செய்த கதாநாயகர்கள்

*''கட்டவண்டி கட்டவண்டி''*

என்ற காலத்தைக் கடந்து

*''ஓரங்கா ஸ்ரீலங்கா கொப்பரத் தேங்கா''*

என்று தற்காலம் வரை அதே பாணியைத்தான் கையாளுகிறார்கள்..

இத்தகைய பாடல்கள் பெண்கள் மீதான பாலியல் ரீதியான தாக்குதலின் தொடக்கம்.

இது ஒரு கலாச்சாரக் கற்பழிப்பு. கும்பல் கும்பலாகத் தெருவில், கல்லூரி வாசல்களில் படையெடுப்பு நடத்தி பெண்களை விமரிசித்துப் பாடும் விடலைகளை உற்பத்தி செய்கின்றன இத்தகைய பாடல்கள். ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவு முளைவிடும் முதல் சந்திப்பிலேயே அழுகியும், நாறியும் போகும்படி செய்துவிடுவதான மனப்பான்மையையே இத்தகைய பாடல்கள் ஏற்படுத்துகின்றன.

www.tamilarangam.net

இன்றைய பாடல்கள் காதலிப்பதற்கும் காதல் புரிவதற்குமான வேறுபாட்டைத் தகர்த்து அதை வெறும் உடல் இச்சையாகக் குறைத்து கேவலப்படுத்தி தூரத்திலிருந்து நாசியில் பட்டாலும் தலைவலி ஏற்படுத்தும் மட்டரகமான செண்ட்டுகளைப் போல குமட்டலை ஏற்படுத்துகின்றன.

விரகம் – விரசமாகி

காதல் – பாலுறவாகி

காதலர்கள் – காமுகர்களாக ஆகிவிடுகிறார்கள்.

இவர்களுடைய பாட்டில்-

*''ரத்தம் கொதி கொதிக்கும்*
*உலை கொதித்திடும்*
*நீர்க்குமிழ்போல*
*சித்தம் துடிதுடிக்கும்*
*புயல் எதிர்த்திடும் ஓர் இலைபோல''*

என்ற பாடல் காதலிப்பது – அடுப்பு, நெருப்பு, கொதிப்பு, தகிப்பு ஆகிய வற்றால் ஆன தீவிரமான கரடுமுரடான உஷ்ண வேலை என்பது போல சித்தரிக்கிறது.

- *நிலாக்காயுது*
- *ஒட்டகத்தக் கட்டிக்கோ*
- *பதினெட்டு வயது இளமொட்டு மனது*
- *ருக்குமணி ருக்குமணி*
- *சின்ன ராசாவே சித்தெறும்பு*
- *உசிலம்பட்டி பெண்குட்டி*
- *லாலாக்கு டோல்டப்பிமா*

போன்ற பாடல்கள் காதலர்களோ, காதலைப் பற்றியோ பேசும்போது பாலுறவு பற்றிய பச்சை வர்ணனைகளாகவே முடிவு பெறுகின்றன.

*''சுண்டு விரல் தொட்டதும் அந்த இடம் துடிக்க*
*காமதேவன் மண்டபத்தில் கச்சேரியும் நடக்க*
*கன்னிமகள் வளையலும் பின்னணிகள் இசைக்க*
*முத்தம் பந்தாடுது உயிர் மொத்தம் தள்ளாடுது''*

இந்த ஜென்மம் ஈடேறாது என்று சொல்லும்படி காதல் கொண்ட மனங்களும், உணர்வுகளும் கௌரவத்தையும், கண்ணியத்தையும் இழந்தே

www.tamilarangam.net

போகின்றன. காதல் என்பது இதுதான். இவ்வளவுதான் என்ற எண்ணத்தை மட்டுமல்ல,

*''கற்பூரம் எதுக்குக் காமிக்கத்தானே*
*கட்டிலும் எதுக்கு சாதிக்கத்தானே''*

என்று வாழ்நாளின் சாதனையே கட்டிலாகவும், பாலுறவாகவும் சித்தரிக்கப் படுவதில் அபாயம் இருக்கிறது.

சொந்த வாழ்வில் காதலித்தபோது நாகரீகத்தை நடுவில் அமர்த்திய கவிஞர் பிறர் வாழ்வின் காதல் மட்டும் உடலிச்சைத் தணிப்பில் உருக்கொள்வதாகக் காட்டுவது புதிராக இருக்கிறது.

ஒரு கவிஞனின் பெருமை அவன் எவ்வளவு செல்வந்தனாக வாழ்ந்தான், எத்தனை வீடுகள் வாங்கினான், எப்படி வியாபாரம் செய்தான், எத்தனை மாளிகை கட்டினான் என்பதனால் அறியப்படுவதல்ல. இப்படிக் கணக்குப் போடுவதாக இருந்தால் வாடகைக்கும், உப்புக்கும், புளிக்கும் திண்டாடி வறுமையில் உழன்ற பாரதி ''மகாகவி'' என்கிற பட்டத்தை விலக்க வேண்டியிருக்கும்.

ஒரு மருத்துவர் அவர் எத்தனை உயிர்களைக் காத்தார் எத்தனை அறுவை சிகிச்சைகளைச் செய்தார் என்பதனால்தான் புகழ் அடைவாரே அல்லாமல் எத்தனை சதுரஅடிக்கு சொந்தக்காரராக இருந்தார் என்பதனால் அல்ல.

மரம் தன் கனிகளால் அறியப்படும்
மனிதன் தன் செயல்களால் அறியப்படுவான்
கவிஞன் தன் படைப்புக்களால் மட்டுமே அறியப்படுவான்

சினிமாக் கவிஞர்கள் சகல ஆற்றல்கள் உடையவர்களாக இருந்தும் வெள்ளிப் பணத்தின் எல்லைக்குள் முடங்கிப் போவதே வேதனை அளிக்கிறது. கா.மு.ஷெரீப் சொன்னதைப் போன்று, ''கவிஞன் என்பவன் ஒரு தாய் மாதிரி, பத்தியம் இருக்கணும், ரசிகனை அவன் புள்ளை மாதிரி நேசிக்கணும். எதைக் கொடுக்கணும் எதைக் கொடுக்கக்கூடாதுன்னு ஒரு பொறுப்போட எழுதணும்'' என்பதைப் பின்பற்றுவது கடினமாக இருந்தாலும் சகமனிதன் மேல் காட்டப்படவேண்டிய சாதாரண நேயத்தையாவது பிரதிபலிக்கலாமில்லையா? தங்களுடைய பேராசைகளையும், சுயநலங் களையும் நிறைவேற்றிக்கொள்ள கேட்போர் நெஞ்சங்களில் நஞ்சு கலக்குகிற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொலை பாதகச் செயலை விட்டு விடலாம் இல்லையா? படித்தவன் பாவம் செய்வதும், பணம் சேர்ப்பதுமே வாழ்வின் வெற்றி என்று அதற்காக எதையும் எழுத முன்வருவது நம் காலத்தின் துயரமல்லவா?

இக்காலப் பாடல்களை அக்காலப் பாடல்களுடன் ஒப்பிட்டுத் தாழ்த்தும் முயற்சியல்ல எனது நோக்கம். போய்விட்ட காலம் பொற்காலம் என்று நிறுவுகிற எண்ணமும் எனக்குக் கிடையாது. எல்லாக் காலங்களிலும் தரமான பாடல்களும் தரமற்ற பாடல்களும் இருந்தே வந்திருக்கின்றன. அத்தகையவற்றை ஒரே படைப்பாளி உண்டாக்கியும் இருக்கிறான். ஆனால் இப்போது தரமற்ற பாடல்களின் விகிதாச்சாரம் விரிவடைந்து கொண்டே போகிறது என்பதே வேதனை.

ஆத்ரேயா, வயலார், ஸ்ரீஸ்ரீ, வரவரராவ், கத்தார் ஆகிய ஆந்திர மாநிலத்துப் புரட்சிக்காரர்களைப் போலவும், மகாராஷ்டிரத்துக் கவிஞன் அமர்ஷேக், வங்காளத்தின் ஷலீல் சௌத்ரி போலவும் கவிஞர்கள் தோன்ற வேண்டும்.

*''கொட்டடி கொட்டி எழுந்தாள் - அன்னை*
*கோபத்திலே மின்னல் தீயை உமிழ்ந்தாள்''*

என்றும்

*''பச்சைப் பசுந்தழை காட்டிலே இலைமேட்டிலே*
*தச்சுக் கிடக்குது புன்னகை மழை''*

போன்ற சந்தச் சொற்களால் கவிதைபாடும் திறனிருந்தும் திரைப்படத் துறையை எடுத்துக்கொள்ளாத எண்ணற்ற கவிஞர்கள் நாடெங்கும் சிதறிக்கிடக்கிறார்கள். அவர்களை அடையாளம் கண்டு ஊக்குவிப்பது சினிமாவின் கடமையும் தமிழரின் கடமையும் ஆகும்.

சாதித்து சலிப்புக் கொண்டுவிட்டவர்கள் தம்மைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் அல்லது விலகி வழிவிட்டு திறமையுடைய புதியவர் களை வளர்ப்பதும் வளரவிடுவதுமே இன்றைய கவிஞர்கள் செய்ய வேண்டிய பணி.

சித்திரக் கவிதைக்கும் சீட்டுக் கவிகளுக்கும் இடையே சிக்கிக் கொண்டிருந்த தமிழன் இருளைக் கிழித்துக்கொண்டு சூரியச் சுடராய் கிளம்பிய பாரதியைப்போல புதிய கவிஞர்கள் புறப்பட்டு வந்து வெள்ளித் திரையை தமிழ் வண்ணத்திரையாக மாற்றுவார்களாக.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விஷத்தை மக்களுக்கு அடையாளம் காட்டுவதும், அதை அவர்கள் அருந்திடாமல் தடுப்பதுமே நமது கடன், அதை பாமரன் திறம்படவே செய்திருக்கின்றார்.

உங்கள் குரல், ஓசை கொண்டு எழுந்து,
தமிழர்களின் கேளாச் செவிகளை முழு வலிமையோடு
தாக்க வேண்டும் என்பது
என் அவா.

உங்கள் நூல் பரவலாக தமிழகம் முழுவதிலும் பரவினால்
இது சாத்தியமாகும் என்பது
என் நம்பிக்கை.

அது குறித்து நீங்களும் தங்கள் நண்பர்களும்
ஆவன செய்ய வேண்டும் என்பதே
என் கோரிக்கை.

**திருமதி திலகவதி இ.கா.ப.**

www.tamilarangam.net

# முடிவு கட்டியாக வேண்டிய வேளை...



திரைப்படங்களைப் பொறுத்தவரை பெண்களை ஒரு போகப் பொருளாக, போதைப் பொருளாகப் பயன்படுத்தும் போக்கையே காணமுடிகிறது.

'சோளிக்கே...' பாடல் இந்தியாவில் ஆகாத பிரபலமா?
பாராளுமன்றத்தில் அதைப்பற்றி விவாதம்...
உயர்நீதி மன்றம் அப்பாடலுக்கு அனுமதி...
இவ்வாறான கேலிக்கூத்துக்கள் இங்குதான் நடக்கும்.
ஷேவிங் கிரீமுக்குக் கூட பெண்களின் முகம்தான் உவமை இங்கு.

உலகில் வாழும் எந்தச் சமுதாயத்தை விடவும் திரைப்படத்தின் கூறுகளால் தமிழ்ச்சமுதாயம் அடைந்துள்ள கேடு மிகவும் வருந்தத்தக்கது. திரைப்படமே வாழ்வு என்றும் வாழ்வே திரைப்படம்தான் என்றும் வாழும் சமுதாயம் நம் சமுதாயமாகத்தான் இருக்க முடியும்.

தம் கவிதைகளால் பூகம்பங்களையே உருவாக்கி, புரட்சியுகத்திற்கு பூபாளம் இசைக்கப் புறப்பட்ட கவிஞர்களும் கூட-தாம் திரைப்படப்பாடல் எழுதும் பாக்கியம் பெற்றவுடன் பெண்ணடிமை-பெண்ணிழிவு-பாலுறவு வர்ணனை என்ற சாக்கடைகளில் புகுந்து சந்தனக்குளியல் சுகம் காண்பவர்களாய் திரிகிறார்கள்.

எங்கு நோக்கினும் பெண்ணிழிவுப் பாடல்கள். அருவெறுக்கத்தக்க ஆபாச வர்ணனைகள்.

இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டிய வேளை வந்துவிட்டது.

இதனைப் பாமரனும் அவரது தோழர்களும் சாதித்துக் காட்டுவார்கள் எனும் அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

திருமதி கு.மா.இராமாத்தாள்,
முதுநிலை துணைப்பதிவாளர்
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனி நான் சொல்ல என்ன இருக்கு...?

# இருந்தாலும் பாருங்க...

www.tamilarangam.net

www.tamilarangam.net

முன்னதாக...

அந்த காவல்துறை வேன் என்றுமில்லாத நிதானத்தோடு அந்தப் பிரதான சாலையின் முனையில் வந்து நின்றது. அப்போது சுமார் ஐந்து மணி இருக்கலாம். வேடிக்கை பார்க்கச் சூழ்ந்திருந்தோர் மத்தியில் என்னவோ ஏதோவென்ற பதட்டம்...

கதவுகள் திறக்கப்பட ...
வேனுக்குள் இருந்து ஒருவர் பின் ஒருவராய் ஆறு இளைஞர்கள் இறக்கப்படுகிறார்கள். உடம்பில் ஜட்டியைத் தவிர ஏதுமற்ற நிலையில்... முக்கால் நிர்வாணமாய் அவ்விளைஞர்கள்.

தலை கவிழ்ந்த நிலையில் நின்றிருந்த அவர்களது
கரங்களில் ஓர் அட்டை அதில் ஏதோ வாசகம்
எழுதப்பட்டிருக்க ...

என்னவென்று புரியாது நெருங்குகிறோம்.

'ம்... நடங்கடா' என்கிறார்கள் போலீசார்.
முன்புறமிருந்த இருவர் வேகமாக நடக்க முயல
போலீசாரின் லத்தி அவ்விருவரின் முட்டியைப் பதம் பார்க்கிறது.

"என்னடா... ஓட்டப்பந்தயமா நடத்தறோம்...?

மெதுவா ஊர்கோலம் மாதிரி நடக்கனும் புரிஞ்சுதா?"
என்கிறது போலீசு.

எங்களுக்கோ அவர்கள் கையிலுள்ள வாசகத்தை
படித்துப் பார்க்க முடியாத நிலை.

மேலும் நெருங்குகிறோம்...

ஏதேனும் அரசியல் போராட்டமா?

இருக்க வாய்ப்பில்லை...

அல்லது பிக்பாக்கெட்டுக்களா?

எதுவாக இருக்கக்கூடும்?

நெருங்குகிறோம்...

அவர்களைத் தாண்டி முன்புறம் சென்றுவிட்டால்
வாசித்து விடலாம் வாசகங்களை.

www.tamilarangam.net

மெள்ள மெள்ள முன்னேறி... ஒரு வழியாய் அவர்களைத் தாண்டி
அட்டையை விழிகள் வாசிக்கும்போது
ஓரளவு புரிந்து போகிறது
அவர்களது தவறு.

அதில்...

"இனி பெண்களைக் கேலி செய்ய மாட்டோம்"
இதுதான் அதில் இருந்த வாசகம்.
தலை நிமிராத நிலையில் அவ்விளைஞர்கள்.

அவர்கள் முன்னே நடக்க -
இருபுறமும் நான்கு காவலர்கள் பக்கத்துணையாய் நடைபயில...
இதற்கும் பின்னே போலீஸ் வேன் மெள்ள ஊர்ந்தபடி...

ஓரங்கட்டிய ஒரு காவலரை விசாரிக்கின்றோம் மெதுவாக.
"என்னங்க பிரச்சனை...?"

"பாருங்க சார் இந்த நாயுங்க ரோட்டுல போற பொண்ணுங்களைப் பாத்து
சினிமாப்பாட்டு பாடீருக்காங்க... அதுதான் இப்படி..."

"சினிமாப் பாட்டா? அதுக்காக இப்படியா... பாவம் சார்..."
என்று பேச்சை வளர்க்க...

"சினிமா பாட்டுன்னா சாதாரண பாட்டா...?

உங்க வீட்டுப் பொண்ணுங்ககிட்ட அதப் பாடியிருந்தா
நீங்க இந்நேரம் பீஸ் பீஸாக்கிருப்பீங்க...
ஸ்டேஷனுக்கு வர்றதுக்குள்ள இவனுங்க கதையை
நீங்களே முடிச்சிருப்பீங்க..."

அவரது குரலில் நிஜ சீற்றம்.

சூழ்நிலை இறுக...

அவர்களுடனேயே நாங்களும் மெதுவாக நடக்க...

சில நிமிட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் அக்காவலரிடமே...
"அப்படியென்ன பாட்டுதான் பாடினாங்க...?"

"ம்... என்ன பாட்டா...?
எப்படி எப்படி சமைஞ்சது எப்படி?"

www.tamilarangam.net

அதற்குமேல் அவர் பேச விருப்பமின்றி அந்த இளைஞர்கள் மீது தம் கவனத்தைத் திருப்புகிறார்.

"எப்படி எப்படின்னு" இப்படி ஒரு பாட்டா...?
எமக்கு அதிர்ச்சி அதிகரிக்க... அதிகரிக்க...

அந்த இளைஞர்கள் ஜட்டியோடு
தலை கவிழ்ந்த வண்ணம் தாண்டிப் போகிறார்கள்.

மனது கனமாகிப் போகிறது.
எம்மில் எவருக்கும் பேச நா எழவில்லை.

"எப்படி எப்படி சமைஞ்சது எப்படி?" இப்படி ஒரு பாட்டா?

"ஆமாம்" என்கிறார் எங்கள் நண்பர்.

"எந்தப் படத்துல?"

"இந்து"

"எவன் எழுதினவன்?"

"வாலி"

எங்கள் சீற்றம் திசைமாறுகிறது.

அந்த இளைஞர்கள் மீது அனுதாபமே அலை மோதுகிறது
அவ்வேளையில்.

பாவம் வெறும் அம்புகள்.
எய்தவன் வாலி என்றொரு காலி.

அவன் மட்டும் பாட்டு என்ற பெயர் கொண்ட
ஒவ்வொரு கருமத்திற்கும்
ஆயிரக்கணக்கில் வாங்கிக் கொண்டு
கவிஞனாய்...
மகாகவியாய்...
உல்லாசமாய் உலா வர...
இதை அறியாத எம் அப்பாவி இளைஞர்கள்
கூனிக்குறுகி முக்கால் நிர்வாணமாய் தெருக்களில்
தலைகுனிந்தபடி...
எமது கோபம் கூடுகிறது.

www.tamilarangam.net

உண்மையில்...
ஜட்டியோடு தெருத்தெருவாய் இழுத்துச் செல்லப்பட வேண்டியவர்கள்
இப்பாடலை எழுதியவன்- இப்படத்தைத் தயாரித்தவன்- இப்படத்தை
இயக்கியவன்- இவர்கள்தான்.

பாவம் இந்த இளைஞர்கள்
வெறும் அம்புகள்.

ஒன்று புரிந்தது:

நாம் விளைவுகளுக்கு
விலங்கு மாட்டிவிட்டு
காரணங்களைக்
கைவிட்டு விடுகிறோம்.

www.tamilarangam.net



# அவதார புருசா வாலி பகவானுக்கு...!

**கும்புடறனுங்க!**

**அந்தக் காலத்துல இருந்தே நான் உங்களோட பரம ரசிகனுங்க. உங்க பாட்டுன்னா எனக்கு ரொம்ப உசுரு. ஒரு காலத்துல நீங்க சினிமாவுக்குக் கட்டுன பாட்டு புஸ்தகத்த வாங்க சைக்கிள் எடுத்துக்கிட்டு சண்முகா தியேட்டர் முன்னாடி இருக்குற மாங்காக்கடை, நாஸ் தியேட்டர் மூலை பொட்டிக்கடைன்னு சுத்தாத எடம் இல்லை. அதுவும் நீங்க "உலகம் சுற்றும் வாலிபன்"ல எழுதுன "நிலவு ஒரு பெண்ணாகி'ங்கிற பாட்ட பாத்ரூம்ல மணிக்கணக்கா பாடீட்டு இருப்பனுங்க. இதுனாலேயே எனக்கும் எங்கப்பனுக்கும் ஏகப்பட்ட சண்டை. "இங்க அவனவன் வேலைக்குப் போக வேண்டாமா? நிலவு என்ன ஆனா எனக்கென்ன? உள்ள போனா சீக்கிரம் வந்து தொலை"ன்னு மல்லுக்கு நிப்பாருங்க. வார்த்தைன்னா அது வார்த்தைங்க.**

**இருந்தாலும் பாருங்க...**
**இது இந்த சனங்களுக்குப் புரியவே மாட்டேங்குது...**

www.tamilarangam.net

கொஞ்ச காலமா நம்மூர்ப் பசங்க வேற ''வாலி என்னத்தை எழுதிக் கிழிச்சாரு? இந்த ஆளுக்கு பொம்பளைங்களப் பத்தி கச கசன்னு எழுதறதத் தவிர வேறு எதாச்சும் தெரியுமான்னு'' எகிறிக்குதிக்கிறானுகங்க.

அட... அப்படியெல்லாம் இல்லப்பா. அவர மாதிரி முத்துத் தெறிச்சாப்பல எழுதறதுக்கு ஆளே கிடையாது...

*''கண் போன போக்கிலே கால் போகலாமா*
*கால் போன போக்கிலே மனம் போகலாமா''* -ன்னு

எப்படித் தத்துவார்த்தமா எழுதீருக்கறாரு. அவரப் போயி அப்படிப் பேசாதீங்கப்பா''ன்னு வக்காலத்து வாங்குனங்க. ஆனா... அதுக்கும் இந்த அனாமத்துங்க சும்மா இருக்காம ''ஆமா அது உங்காளு எழுதுன பாட்டுதான். ஆனா அது மாதிரியே உங்காளு கண் போன போக்குல எல்லாம் எழுத ஆரம்பிச்சிட்டாரு... 'இந்து' பட பாட்டக் கேட்டியா...

*''உட்டாலக்கடி செவத்த தோலுதான்*
*உத்துப் பாத்தா உள்ள தெரியும் நாயுடு ஹாலுதான்'* னு

வக்கரம் புடுச்சு எழுதீருக்கார்யா உன் ஆளு... உங்காளு கண் போற எடம் பாத்தியான்னு மானத்த வாங்குறாங்க. எனக்கே ஒரு மாதிரி ஆயிருச்சுங்க. நீங்க எவ்வளவு பெரிய அவதார புருசரு...

இருந்தாலும் பாருங்க...
இது இந்த சனங்களுக்குப் புரியவே மாட்டேங்குது...

நம்முளுக்கு அவ்வளவாப் 'பார்வை' கெடையாதுங்க. ஆனா... அதென்ன பழைய பார்வையோ... புதிய பார்வையோ இருக்காமா... அதுல

> ''தமிழின் வளர்ச்சிக்கு 'காம்ப்ளான்' தேவையில்லை.
> அது வானம்போல் வளர்ந்து நிற்கிறது.
> நாம்தான்-
> தமிழால் வளர்கிறோம்.
> இந்த நினைவு எவனுக்கு இருக்கிறதோ,
> அவனைத்தான் தமிழும் வளர்த்து விடுகிறது.
> தேயவும், வளரவும் தமிழ் திங்கள் அல்ல. அது என்றுமுள்ள தென்றல்.
> அது தேயும், வளரும் என்றெல்லாம் அரசியல்வாதிகள் பேசி
> ஆதாயம் தேடிவிட்டுப் போகட்டும்.
> நாம் -
> தமிழால் வளர்ந்து கொண்டு வருவோம்.
> தமிழ் மீது உள்ள என் ஆசைதான்
> என்னை சினிமாவிற்குக் கொண்டு வந்துவிட்டது''. – **'மகாகவி' வாலி**

www.tamilarangam.net

நீங்க ஞானதிருஷ்டியோட எழுதறத அப்பப்ப நம்ம ஆளுங்க படிச்சு சொல்லுவாங்க. அதக் கேட்டா மயிர்க்காலெல்லாம் அப்படியே குத்தீட்டு நிக்கும்க.

*''இறையுணர்வு எவனுக்கு உள்ளத்தே*
*உண்மையாக உறைந்திருக்கின்றதோ*
*அவன் மனம்தான் அமைதிகாக்கிறது''*-ன்னு

எவ்வளவு அற்புதமா சொல்லியிருக்கீங்க. உங்குளுக்கு இருக்குற "இறையுணர்வுல" கால்வாசியாவது இந்தப் பசங்களுக்கு வரும்களா? நீங்க எப்பேர்ப்பட்ட ஞானி. உங்களப்பார்த்தாலே ஒரு பகவானப் பார்த்த மாதிரி தான் இருக்குது. இதெல்லாம் இந்தப் பசங்களுக்கு சுட்டுப்போட்டாலும் புரியாது.

கொஞ்சநாள் முன்னாடி இந்த அனாமத்துங்க சும்மா இருக்காம என் வாயக்கிண்டுனாங்க...

"யோவ் வாலிதாசா! சுப்பிரமணியசுவாமி பாத்தியா"ன்னு கேட்டாங்க.

அவனையெல்லாம் நான் எதுக்கு பாக்கப் போறேன். எனக்கு வேற வேலவெட்டி இல்லியான்னு கேட்டேன்.

''யோவ் அதில்லையா... சுப்பிரமணியசாமின்னு ஒரு சினிமாப் படம்''ன்னாங்க.

ஓ... சினிமாவா...? பக்திப் படமான்னு கேட்டேன்.

''சாதாரண பக்தியில்லய்யா... செம பக்தி... அதுக்கு உங்காளுதான் பாட்டு''

*சம்திங் ஐ வான்ட்... சம்திங் சம்திங் ஐவான்ட்.. சம்திங்*
*பாட்டுக்கு பாட்டு ஹேய் சம்திங் சம்திங்*
*ஓட்டுக்கு வேட்டு ஹோய் சம்திங் சம்திங்*
*வேட்டுக்கு வேட்டு ஹேய் சம்திங் சம்திங்*
*வெலகணும் ஓட்டு ஹோய் சம்திங் சம்திங்*
படம் : அஞ்சலி

*டே பை டே என்ன மாற்றம் என்ன மாற்றம்*
*டே பை டே என்னை மாற்றும் உந்தன் தோற்றம்*
படம் : ஆனஸ்ட் ராஜ்

– 'மகாகவி' வாலி

www.tamilarangam.net

> ''எப்பொழுதுமே சரியான நபரைத் தேர்ந்தெடுத்துதான்,
> உச்சத்தில் வைக்கிறான் இறைவன்.
> அந்த இடத்தைத் தக்கவைத்துக் கொள்ளாமல்,
> தன் வாயாலேயே கெடுகின்ற நுணல்களாக
> சிலரை மாற்றுவது
> அவர்கள்பால் மெல்ல மெல்ல
> மண்டி விடுகிற மமகாரம்தான்!''
>
> – **'மகாகவி' வாலி**

**அதான பார்த்தேன். நான் அப்பவே சொன்னனில்ல.**

**நம்மாளுக்கு "இறையுணர்வு" அதிகம்னு... நீங்கதான் கேக்கல... ன்னு சொன்னதுதான் தாமதம்...**

**"யோவ்... வாயக்கழுவு மொதல்ல. உங்க வாலி என்ன எழுதீருக்கார்னு தெரிஞ்சா நீயே காரித் துப்பீருவே..."**

*''பொறக்க வேணும் மாமா பொறக்க வேணும்*
*தொறக்க வேணும் அதுக்கு தொறக்க வேணும்''*-**ன்னு.**

**இதெல்லாம் ஒரு பாட்டா? இதுக்கு உன்னையும் உன் ஆளையும் நடுரோட்ல வெச்சு கால்ல இருக்குறத கழட்டி அடிக்கணும்யான்னு, ஒதைக்க வந்துட்டாங்க. மொதல்ல ஆளை உட்டா சரின்னு பின்னங்காலு பொடனில பட பறந்திட்டேன்.**

**நீங்க –**

*''அந்த முருகன் போல புள்ள ஒண்ணு*
*பொறக்க வேணும்*
*அதுக்கு*
*அந்த ஆண்டவன்தான் கண்ண கொஞ்சம்*
*தொறக்க வேணும்''* **னுதான் சொல்றீங்க**

**எனக்குப் புரியுது...**

**இருந்தாலும் பாருங்க...**
**இது இந்த சனங்களுக்குப் புரியவே மாட்டேங்குது...**

**நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவனுக கேக்கற மாதிரி இல்ல... அந்தப் பாட்டக் கேட்டதும் எனக்கே ஒரு சின்ன சந்தேகம்...**

www.tamilarangam.net

*பெ: ஏற வேணும்... மாமா ஏற வேணும்*
*என் கூட சேர்ந்து பழனி மலை ஏற வேணும்*
*ஆ : தூக்க வேணும் நீ தான் தூக்க வேணும்*
*என் கூட சேர்ந்து காவடிய தூக்க வேணும்*
*பெ: வாயில இனிக்கிறாப்புல... ஓ...*
*என் வாயில இனிக்கிறாப்புல...*
*ஆ : வைக்க வேணும் வைக்க வேணும் பேரு*
*ஆ: பார்த்தா கிளம்பும் பாரடி... ஓ*
*நீ பார்த்தா கிளம்பும் பாரடி*
*பிள்ளைகளின் மேலே ஒரு ஆசை*
*இங்கே எல்லோருமே சம்பாதிப்பான் காசை*

**படம் : சுப்பிரமணியசாமி — 'மகாகவி' வாலி**

**நான் உங்க அளவுக்கு பெரிய பாட்டுக்காரன் இல்ல...**

**உங்க கால் தூசுக்குக் கூட நான் சமானமில்லைன்னு தெரியும்...**

**இருந்தாலும் ஒரு சந்தேகம்...**

**ஏங்க...**

*''பொறக்க வேணும் மாமா பொறக்க வேணும்*
*தொறக்க வேணும் அதுக்கு தொறக்க வேணும்''***னு..**

**மொதல் வரில போட்டதுக்குப் பதிலா...**

*அந்த முருகன் போல புள்ள ஒண்ணு***ன்னு போட்டுட்டு அதுக்கப்புறம்**
*'பொறக்க வேணும்'***னு போடக் கூடாதுங்களா?**

**அத மாதிரியே**

*'அந்த ஆண்டவன்தார் கண்ண கொஞ்சம்'***னு போட்டுட்டு அதுக்கப்புறம்** *'தொறக்க வேணும்'***னு போட்டா நம்ம சினிமாக்காரங்க ஒத்துக்க மாட்டாங்களா...?**

**எனக்குத் தெரியும். நீங்க பெரிய்ய்ய....ய பக்திமான். நான் சொன்ன மாதிரிதான் நீங்க எழுதிக்குடுத்திருப்பீங்க. ஆனா... இந்த சினிமாக்காரங்க தான் மாத்தி போட்டுருப்பாங்க.**

**எனக்குப் புரியுது...**
**இருந்தாலும் பாருங்க...**
**இது இந்த சனங்களுக்குப் புரியவே மாட்டேங்குது...**

www.tamilarangam.net

அதென்னவோ 'சாமுண்டி'ன்னு ஒரு படமாமா. அதுலயும் நீங்க பாட்டெழுதி பாழாக்கீட்டீங்க தமிழ்நாட்டைன்னு ஒரே புலம்பலு. சரி, அது என்னதான் பாட்டுன்னு நானும் கேட்டேன். அதென்ன...

*''கதவச் சாத்து கதவச் சாத்து மாமா*
*நான் கன்னி கழிய வேணுமையா ஆமா*
*கன்னி நான் கழிஞ்சிதான் தாலிய*
*நீ கட்ட வேணும்''*

இத கேட்ட உடனே கொஞ்சம் தலைசுத்தற மாதிரி இருந்துச்சுங்க... ஒரு சோடா ஒண்ணு அடிச்சப்பறந்தான் உங்க பாட்டோட கருத்தாழமே புரிஞ்சுது. அதுல எவ்வளவு அர்த்தம் இருக்குதுன்னு தெரிஞ்சுது. ''கலாச்சாரம்'', ''கலாச்சாரம்''னு இங்க அவனவன் புலம்பீட்டு பொண்ணுங்கள அடிமைப்படுத்தீட்டு இருக்குறானுங்கங்குற வேதனைல நீங்க அந்த பாட்ட எழுதீருக்கீங்கன்னு புரிஞ்சுது.

குருவே! ஒரு நிமிஷம் ...
நான் சொன்னது கலாச்சாரம்.

உடனே நீங்க கலா-சாரம்ன்னு நெனச்சுக்கிட்டு
அதுக்கொரு பாட்ட ஆரம்பிச்சுராதீங்க.

தமிழ்நாட்டுப் பெண்கள் வரதட்சணைக் கொடுமைகளால கல்யாணமே ஆகாம கஷ்டப்படுறாங்கன்னு அந்தக் கவலைதான் நீங்க கலாச்சாரமாவது வெங்காயமாவதுன்னு கோபத்துல இத எழுதியிருக்கீங்க.

இது எனக்குப் புரியுது.
இருந்தாலும் பாருங்க....
இது இந்த சனங்களுக்குப் புரியவே மாட்டேங்குது...

''இந்த ஆளு சாகப்போற காலத்துல கூட சமூகத்த சீழ் புடிக்க

> ''வழிபடு பொருள்
> ஒன்றுதான்; வழிபாடுகள் தாம் வித்தியாசப்படுகின்றன.
> எல்லாம் வல்ல எம்பெருமான் முருகன்
> என்னுள் உறங்கிக் கிடந்த கவித்துவத்தை
> மீண்டும் எழுப்பிவிட்டு
> என்னைப் பாடப் பணித்தான்''. — **'மகாகவி' வாலி**

www.tamilarangam.net

வெச்சுட்டுத்தான் சாவான். இந்த ஆள் பாட்டெழுத வந்ததுக்கு பதில் பேசாம அதென்ன புழுபிலிம்மோ - புளுபிலிம்மோ இருக்காமா? அத எடுக்கப் போலாம்... இந்த யோக்யதைல "அவதார புருசன்", "20-ம் நூற்றாண்டும் நானும்"னு எழுதி வேற கிழிக்கணுமா"ன்னு ஒரே புலம்பல்.

"யோவ் வா்லிதாசா! நாமெல்லாம் பொம்பளைங்களப் பாத்தா ஒரு சாக்கு மூட்டை மாதிரி பார்ப்போம். ஆனா... உங்காளு வாலி இருக்கானே... அவன் அந்த சாக்கு மூட்டைக்குள்ள ஏதாவது பொம்பள இருக்கான்னு பாப்பான்யா"ன்னு அநாகரீகமாப் பேசறானுகங்க. எனக்கு அதக் கேட்டதும் செரியான கோபம் வந்திருச்சுங்க.

யோவ் எது பேசறதுக்கும் ஒரு அளவிருக்கு. எங்க ஆள் எவ்வளவு பெரிய தன்னடக்கக்காரரு, பக்திமான். அவரப்போயி அனாவசியமா வம்புக்கு இழுக்காதீங்க. "அவதார புருசன்"னு ஆனந்த விகடன்ல அவர் எழுதுனத படிச்சீங்களாய்யா? நீங்க எல்லாம் ஞான சூன்யங்க. மதப்பற்றுன்னா அவருக்கு இருக்கறதான்யா மதப்பற்று நீங்களுந்தான் இருக்கீங்களே.

*"நான் ஒரு இந்து. இதைச் சொல்லிக்கொள்ள எனக்கு அச்சமில்லை. வெட்கமில்லை. இப்படிச் சொன்னால்தான் நான் இந்து. இல்லையேல் ஏதோ ஐந்து"*ன்னு எவ்வளவு தீர்க்க தரிசனத்தோட எழுதிருக்காரு. "புதிய பார்வை"ல.

*(மெட்டு - கந்தசஷ்டி கவசம்)*
*பெண் : பதினெட்டு வயது இளமொட்டு மனது ஏங்குது பாய்போட*
*பனி கொட்டும் இரவு பால் வண்ண நிலவு வேண்டுது உறவாட!*
*கங்கை போலே காவிரி போலே ஆசைகள் ஊறாதா*
*சின்னப் பொண்ணு செவ்வரிக் கண்ணு ஜாடையில் கூறாதா*
*ஆண் : மாணிக்கத்தேரு மணிமுத்து ஆறு போதும், போதும் நீ ஒதுங்கு.*
*அந்த பாயை போட்டுத்தான் உறங்கு*
*பெண்: நான்விட மாட்டேன் தூண்டிலைப் போட்டேன் காலந்தோறும் நீ எனக்கு*
*இது காலதேவனின் கணக்கு*
*ஆண் : கூசுது உடம்பு குலுங்குது நரம்பு நீயென்ன உரசாதே*
*பெண்: கூச்சங்கள் எதுக்கு ஆண்மகன் உனக்கு நீயென்னை விலகாதே*
*ராத்திரி நமக்கு முதல் ராத்திரி*
*பழம்கொண்ட பாத்திரம் பக்கம் இருந்திட விருந்திட ஆசை விடுமா?*
*குழு : சும்மா நின்னா மாமனைக் கண்டு தலையணை சிரிக்காதா?*
*சூரியன் வந்து சுள்ளுனு சுட்டா தாமரை வெடிக்காதா?*
*பெண்: மாங்கனிச் சாறும் செவ்விள நீரும் மேலும் கீழும் தான் இனிக்க -*
*அதை மீண்டும் மீண்டும் நீ எடுக்க*
*பெண்: மன்மத பாணம் பாயுற நேரம் வீரத்தை நிலைநாட்டு*
படம் : சூரியன் - **'மகாகவி' வாலி**

www.tamilarangam.net

> 'அண்ணா! எது கவிதேன்னு
> என் மனசுக்குப் படறதோ- அதெத்தான் எழுதுவேன்.
> கண்டதெ எழுதிப் பண்டிதனாகணும்கிற
> ஆசையெல்லாம் எனக்கில்லே...'
> என்றேன் நான். – **'மகாகவி' வாலி**

**அவரப் போயி வாய் புளுச்சுதோ மாங்கா புளுச்சுதோன்னு பேசாதீங்க. அவரு யாரு தெரியுமில்ல? திருவரங்கத்து அய்யங்காரராக்கும்னு பிச்சு ஒதறிட்டேன் பிச்சு.**

**"யோவ் அவரு அய்யங்காரரா இருந்தா என்ன இல்ல அம்பாசிடர்காரா இருந்தா எங்களுக்கென்ன? உங்க அவதார புருசர் எழுதுன 'நவீன கந்த சஷ்டி கவசம்' கேட்டியா"ன்னு திருப்பி அடிச்சானுகங்க ஓர் அடி. அப்பவே நான் முடிவு பண்ணீட்டேன். நாம அவுட்டுன்னு. அதென்னவோ கந்த சஷ்டி கவசம் பாடற அதே டியூன்ல-**

*"பதினெட்டு வயது இளமொட்டு மனது*
*ஏங்குது பாய் போட..."*-**ன்னு**

**ஒரு பாட்ட 'சூரியன்' படத்துல எழுதீருக்கீங்களாமா?**

**ஏன் குருவே இதெல்லாம் நமக்குத் தேவையா? எனக்கு இந்த சாதி, மதம்... இந்த எழவெல்லாம் ஒண்ணும் புரியாது. இங்க அவனவன் கை ஊணி கரணம் போடாம கால் வயுறு கூட நெரம்பாதுன்னு நெனைக்கிற சாதிங்க நானு.**

**இருந்தாலும் குருவே! சாமி இல்லேன்னு சொல்றவங்ககூட நாகரீகமாச் சொல்றாங்க இங்கே. ஆனா நீங்க "தொறக்க வேணும்", "பதினெட்டு வயசு இளமொட்டு மனசு"ன்னு உங்களுக்கே நீங்க 'கோல்' போடலாமா? ஏதோ மனசுல வெச்சுக்காம கேக்கணும்னு தோணுச்சு கேட்டுட்டேன் அவ்வளவுதான்.**

**அதென்னமோ தெரியல..**
**என்ன மாயமோ புரியல..**

**கொஞ்ச நாளா எனக்கே உங்க மேலேயே சந்தேகம் வர ஆரம்பிச்சிடுச்சு.**
**அவ்வளவு ஏன் ஆத்திரமே வந்துடுச்சுன்னா பாத்துக்கங்களேன்.**
**அதுவும் உங்க, "எப்படி எப்படி சமஞ்சது எப்படி?"ன்னு**
**நீங்க எழுதுன பாட்டக் கேட்டதும் அவனுங்க சொல்றதுலயும்**
**ஒரு நியாயம் இருக்குதோன்னு தோணுதுங்க. எதுக்கும் அந்த பாட்ட**
**முழுசா ஒரு தரம் கேட்டுறலாம்னு கேட்டுப் பார்த்தேன்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆ : வாய்யா நடுக்கமா வெல்லம் கசக்குமா
வெறுங்கதை அளக்குறியே ஐய்யய்யோ ஆத்தா
உட்டுடு கோடி கும்பிடு... உணர்ச்சிய உசுப்புறியே

பெ: அடக்கிட முடியலை சாமி
அதுக்கொரு வழியென்ன காமி அதுக்கு...

படம் : சாமுண்டி — 'மகாகவி' வாலி

உங்குளுக்கு வர்ற சந்தேகம் ரொம்ப நியாயந்தாங்க...
இந்த இருபதாம் நூற்றாண்டுல இதத் தவிர வேற முக்கியமான சந்தேகம் எதாவது இருக்க முடியும்களா...?

ஆனா... எனக்கொரு சந்தேகம்...
என்னடா நம்ம ஆளே கேக்கறானேன்னு நெனச்சுக்கக்கூடாது.

உங்க கூடப் பொறந்த பொட்டப் புள்ளைங்க யாரும் கெடையாதுங்களா...?
அதில்லாட்டி உங்க சம்சாரம் இருந்திருப்பாங்களே...
அதுவும் இல்லாட்டி...
உங்க சித்தப்பம் பொண்ணு பெரியப்பம் பொண்ணுன்னு
யாராவது இருந்திருப்பாங்களே...
சத்தமில்லாம...
"மன்னிச்சுக்கம்மா...
எனக்கொரு சந்தேகம்...
வேற வழி தெரியல..
இந்தப் பொம்பளைங்க
எப்படிச் சமையறாங்க..."ன்னு கேட்டிருக்கலாமே.

அத உட்டுட்டு தமிழ்நாடு முழுக்க மூலை மூலைக்கு நின்னு கேக்குறீங்களே! இது நியாயமா...? அதயும் இங்குள்ள மானங்கெட்ட பசங்க சில பேரு கேட்டுகிட்டு இருக்கானுங்களே அத நெனச்சாதான் மனசுக்கு கஷ்டமா இருக்கு.

அட அதுதான் முடியல... அந்தப்பட டைரக்டர்... யாரது...? பன்னாடைக்குப் பேரு பவித்ரன்னு வெச்சுருக்காங்களே... அந்தாளு கிட்டயாவது கேட்டுருக்கலாமில்லை...

அத உட்டுட்டு...

www.tamilarangam.net

உங்க ஊட்டுப் பொம்பளைங்கள எல்லாம் உட்டுட்டு...
எங்க வீட்டுப் பொம்பளைங்க கிட்ட வந்து விசாரிக்கிறீங்களே...
எழுபத எட்டப்போற வயசுல வர்ற சந்தேகமா இது...?

அதென்னமோ...

"நான் எழுதித் தர்றதுல தேவையானதுகள அவங்க எடுத்துக்கறாங்க. அவங்களுக்குத் தேவையான திருத்தங்களையும் செஞ்சு வாங்கிக்கிறாங்க. அது அவங்க உரிமை. அதுல தலையிட எனக்கு உரிமை கிடையாது"ன்னு எழுதறீங்களே...

நான் ஒண்ணு கேக்கறேன்... சம்பளம் பத்தலேன்னா மட்டும் 'பெரிய தயாரிப்பாளரு, இயக்குநரு'ன்னு நீங்களே சொல்ற மாடர்ன் தியேட்டரு மொதலாளி டி.ஆர். சுந்தரத்துகிட்டயே "சரிப்பட்டு வராது"ன்னு சட்டுன்னு வாய் வருதே உங்களுக்கு...

அதுக்கு அவரு வேற...

"பாரதிதாசன், கண்ணதாசனெல்லாம் கூட எங்கிட்ட Bargain பண்ணதில்ல You did it-ன்னு சொன்னாராமா?

ஒரு தடவை உங்க பாட்டுல பொருள் குத்தம் இருக்குன்னு சொன்னதுக்காக எம்.ஜி.ஆர்.கிட்டயே "அப்படியெல்லாம் இல்லே"ன்னு அடிச்சுப் பேசுனீங்களாமா...?

அப்படிப்பட்ட வெண்ணை வெட்டி சிப்பாயி உங்க பாட்ட எவனாவது மாத்தி எழுதுனா எடுத்துட வேண்டியதுதான உங்க வீராப்பை. "உனக்கும் எனக்கும் சகவாசமே வேண்டாம். அடுத்த படத்துல நான் எழுதமாட்டேன்"னு சொல்றதுக்குள்ள வாயிலென்னாவது வலிப்பு வந்துடுச்சுங்களா...?

ஆடத் தெரியாதவ மேடை சரியில்லேன்னாளாம்...
அந்தக் கதையா–
தத்துவமாப் பொழிஞ்சா நான்தான் எழுதுனேங்கறதும்...
தத்துபித்துன்னு எழுதி மாட்டிக்கிட்டா...
எவனோ மாத்திட்டான்னு மழுப்பறதும்
எங்களையே கேணப்பயலுங்க ஆக்குற விசயங்க.

உங்களச் சுத்தியிருக்கிற சனத்துக்குத்தான் எதுவுமே இல்லேன்னா...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டினியாக் கெடந்தாலும் பத்தினியாச் சாகணும்கிற
எங்க சனத்துக்கிட்டயும் உங்க வேலயக் காட்டுறீங்களே?

கடைசியா ஒண்ணே ஒண்ணு சொல்றனுங்க...
கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க...

பாட்டுங்கற பேர்ல பாடாவதியா
எழுதீட்டு இருக்குறதுக்குப் பதிலா...
பேசாம....
வேற ஏதாவது
'தொழில்' செய்யப்போலாம்.

- பாமரன்

www.tamilarangam.net

“ஏன் எழுதுகிறீர்கள் இப்படி...?”
என்றாள் அவள்.

இப்படி... என்றால்... எப்படி...? என்றேன்.

“அவன்”, “இவன்”
என்று நாகரீகமில்லாமல்...”

இதயத்தில் ஒன்றும்...
எழுத்தில் ஒன்றுமாய்...
வேஷங்கட்ட முடியாது என்னால்...

“அதற்காக இப்படியா...?”

ஒரு சந்தேகம்...

“கேளுங்க...”

பணி முடிந்து வீடு திரும்பும்போது
உன்னிடம் ஒருவன்-
“மசாலா அரைக்கிற மைனா
உன் மத்தாளம் என்ன விலை?”
என்கிறான்... என்னவென்பாய் நீ...?

“போடா... ‘பொறுக்கி’ என்று
காலில் இருப்பதைக்
கழட்டி அடிப்பேன்... அவ்வளவுதான்...”

என்னால் அடிக்கமுடியவில்லை.
அதுதான் இப்படி...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''புரியவில்லை எனக்கு...'' என்றாள்.

உன்னைப் பார்த்து
பாதையோரத்தில் பாட்டுப்பாடுபவன்
பொறுக்கி என்றால்...
அப்பாட்டை எழுதியவனும்
பொறுக்கிதான்...
அப்பாட்டுள்ள படத்தை இயக்கியவனும்-
அப்படத்தைத் தயாரித்தவனும்-
''இப்படியிருந்தாத்தான் போகுண்ணே'' என்று
வாங்கி விநியோகித்தவனும்
பொறுக்கிகள்தான்.

''அப்ப... எல்லோரையுமே
பொறுக்கி என்கிறீர்கள்...''

சந்தேகமில்லாமல்...
அந்தப் பாட்டை உள்ளுக்குள் ரசிப்பவன் உட்பட.
அந்தப்பாட்டை நியாயப்படுத்துபவன் உட்பட..

''எழுத்து நாகரீகம்... என்று ஒன்று?''

அது மனிதர்களிடம் மட்டுமே
கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்று.

''இறுதியாக என்னதான் சொல்கிறீர்கள்...?''

உள்ளத்தில் இருப்பதுதான்
உதட்டில் வர வேண்டும்
இதுவே என் வழி.
உள்ளே
''அவன்'' என்றிருந்தால்
உதட்டிலேயும்
''அவனா''கத்தான் வரும்.

''அவன்''
அவரானால்
அப்புறம்
அவன்களுக்கும்

www.tamilarangam.net

எமக்கும் ஏதும்
வித்தியாசமற்றுப் போய்விடும்.

எம் கலாச்சார எதிரிகளை
அவரென்று
அழைக்க முடியாத
அவல நிலையில்
இருக்கிறேன் தோழி.

கத்தியால் குத்த வருபவனோடு
கலந்துரையாடிக் கொண்டிருக்க
முடியாது என்னால்...

பெண் இனத்தையே கொச்சைப்படுத்தி
எம் கலாச்சாரத்தையே கூறுபோட்டுக்
கூவி விற்கும் இக்காலிகளை
"அவரென்று" அழைக்க முடியாத...
எழுத்து நாகரீகமற்ற...
மனித நாகரீகமற்ற...
இந்த "காட்டுமிராண்டியை"
மன்னித்துவிடு தோழி.

- பாமரன்

www.tamilarangam.net

இந்த இயக்குநர்கள் அல்லது இப்பாடலாசிரியர்களது குடும்ப உறவுகள் எப்படி இருக்கிறதோ எமக்குத் தெரியாது. அது நமக்கு அவசியமுமற்றது. ஆனால் இவர்கள் தங்கள் பாடல் வரிகளில் முறையற்ற உறவுகளையே முதன்மைப்படுத்துகிறார்கள்.

பாடல்களில் ஒரு ''புதிய கலாச்சாரம்'' படைக்கிறார்கள் இப் பாடலாசிரியர்கள்.

*''கொளுந்து வெத்தல எடுத்து எடுத்து*
*கொளுந்தன் கையில கொடுத்து கொடுத்து*
*மறந்து மறந்து மறந்திடாம*
*புதிய பாட்டு பாடச் சொல்லி*
*கிறங்கி கிறங்கி உறங்கிடாம*
*விடியும்போது கேட்கச் சொல்லி*
*படிச்ச பாட்ட கேட்டதாரு*
*படிக்கும்போது பாத்ததாரு''*

'கேப்டன் பிரபாகரன்' படத்தில் வரும் பிறைசூடனின் பவளவரிகள் இவை.

இத்தகைய பாடல்கள் நாற்பதாண்டுக்கு முன்னர் இருந்திருப்பினும் சரி,
நாட்டுப்புறப் பாடல்களில் வந்திருப்பினும் சரி,
அல்லது சங்ககாலப் பாடலாயினும் சரி,
கொளுத்தப்பட வேண்டியவையே.
காலம் கணக்கல்ல.
பதினேழாம் நூற்றாண்டில் ஆங்கிலேயனுக்கு பல்லக்குத் தூக்கினார்கள்
என்பதற்காக இந்நூற்றாண்டின் துவக்கத்தில் போர் முரசு கொட்டிய
பகத்சிங்கை பிழைக்கத் தெரியாதவன் என்று எந்தப் பைத்தியமாவது
சொல்லுமா?

ஆனால் கோடம்பாக்கத்துக் கோமாளிகள் அப்படித்தான் சொல்கிறார்கள்.
''அன்றைக்கில்லாத ஆபாசமா?'' என்கிறார்கள்.
''ஆபாசம்'' அன்றைக்கிருந்தால் என்ன இன்றைக்கிருந்தால் என்ன
என்றைக்கும் ''ஆபாசம்... ஆபாசம்'' தானடா அறிவிலிகளே...

*''கொட்டப் பாக்கும்*
*கொழுந்து வெத்தலையும்*
*போட்டா வாய் சிவக்கும்*

www.tamilarangam.net

*மச்சான் நீயும் மச்சினி நானும்*

*தொட்டா தூள் பறக்கும்''*

**இது நாட்டாமை படப்பாடல். ''மச்சான் - மச்சினி'' என்ன உறவோ எழுதிய புண்ணியவானுக்கே வெளிச்சம்.**

**இவையெல்லாவற்றையும்விட கோடம்பாக்கத்தில் ''கலைக் குடும்பம்'' ஒன்று இருக்கிறது. இக்கலைக்குடும்பத்தின் படம் என்றாலேயே மக்களுக்கெல்லாம் புல்லரித்துவிடும்.**

**அம்மா தயாரிப்பார்- ஷோபா**

**அப்பா இயக்குவார் - எஸ்.ஏ. சந்திரசேகரன்**

**மகன் நடிப்பார் - விஜய்**

**மாமா பாடுவார் - சுரேந்தர்**

**ஆனால் படம் பார்க்கச் சகிக்காது. பாடல் கேட்கச் சகிக்காது.**

**இதோ... இக்கலைக்குடும்பத்தின் 'தேவா' படப்பாடல்:**

*''சின்னப் பொண்ணு நல்லாருக்கா*

*பெரிய பொண்ணு நல்லாருக்கா*

*சொல்லுங்க மருமகனே*

*சின்னப் பொண்ணும் வேணா மாமா*

*பெரிய பொண்ணும் வேணா மாமா*

*அத்தை மட்டும் போதும் மாமா*

*என் மக்கு மாமா*

*மத்ததெல்லாம் சொத்தை மாமா''*

**இந்தப் பாட்டின் ''இறைவன்'' வேறு எவருமில்லை வாலிதான். இதற்காக எங்கே மக்கள் தன்னை செருப்பாலடித்து விடுவார்களோ என்ற முன்ஜாக்கிரதையில் பாடலின் (?) இறுதி வரியில் ''அடிரா செருப்பால ராஸ்கோலு'' என்று முடித்திருப்பது இவரது சாமர்த்தியத்திற்குச் சான்று.**

**''நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்'' என்பதற்கு இன்றைக் குள்ள ஒரே ஆதாரம் ஷோபா-சந்திரசேகர் குடும்பம்தான். குடும்பம் குறித்து ஒரு பல்கலைக்கழகமே அஞ்சல் வழியில் நடத்துமளவிற்கு சரக்கிருக்கின்றது இவர்களிடம். ஊருக்கு ஒரு குடும்பம் போதும் இப்படி. ஊர் உருப்பட்டு விடும்.**

**இவர்களது குடும்பப் படமான ரசிகனில் வரும் ஒரு பாடல் இவர்களது கலைச்சேவைக்கு மற்றுமொரு சான்று:**

www.tamilarangam.net

(இனியவர்க்கு! மன்னியுங்கள். இந்தக் காமுகர்களை அம்பலப்படுத்துவதற்கு இப்பாடலை முழுதாகப் பிரசுரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. தயவுசெய்து மன்னியுங்கள் எங்களை. படிப்பதற்கு முன்னர் மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்...)

பெண் : *ஆட்டோ ராணி ஹாரன கொஞ்சம் அடிச்சா போதுமையா*
*மீட்டர போட்டு சீட்டுல ஏற ஊரே கூடுமய்யா...*

வசனம்: *கண்ணா உனக்கு எந்த ஊரு...?*
*ஏறுவாடி....*
*ஏய்...*
*ஊரு பேர சொன்னேம்மா*
*ஆமா ஆட்டோல ஏறலாமா?*

பெண் : *இன்னிக்கு முடியாதையா... ஏன்?*

பெண்: *ராத்திரி ஆச்சி ஆரம்பம் ஆச்சி ஆயுத பூஜைதான்*
*சந்திரன் இப்ப உச்சமிருக்கும் பவுர்ணமி வேளைதான்*

ஆண்: *ஊதுவத்தி ஏத்தி வச்சி*
*சூடம் காட்டட்டா... ஆ... (ஆட்டோ)*

பெண் : *என் வண்டியில் ரொம்ப பேரு ஏற துடிப்பான் ஸ்டாண்டில நான்*
*நிக்குறப்போ ஜொள்ளு வடிப்பான்*

ஆண்: *கண்டவன ஏறவிட்டா வண்டி கெட்டிடும் அப்புறமா இஞ்சின்*
*தேய்ஞ்சி ஆயில் கொட்டிடும்*

பெண் : *வால் ஆட்ட நெனச்சா ஜோட்டால அடிப்பேன்*
*டாவேது அடிச்சா டங்குவார அறுப்பேன்*

ஆண் : *அம்மாடியோ நீயும் என்ன பூலான்தேவியா... ஆ... சோக்கா*
*இருக்க உன்ன பாத்தா சூடு கெளம்பாதா... என்னப் போல*
*பசங்களுக்கெல்லாம் மூடு கெளம்பாதா...*

ஆண் : *உன் உடம்பு தாங்காதம்மா ஓவர் லோடுதான்*
*ஓட்டுறப்போ கூடாதம்மா ஓவர் ஸ்பீடுதான்*

பெண் : *எந்த லோடும் தாங்கிக் கொள்ளும் வண்டி இதுதான்*
*எத்தனையோ பார்த்தவ நான் வயசு பொண்ணுதான்*

ஆண் : *நீதாண்டி எனக்கு தோதான சரக்கு*
*உன் வண்டி இருக்க வேற வண்டி எதுக்கு*

www.tamilarangam.net

*பெண் : பொட்டபுள்ள ஆனா என்ன கட்ட புள்ளதான்*
*கையும் காலும் கும்முனு இருக்கும் கப்பக்கிழங்கு*
*கட்டழகெல்லாம் கொட்டி கிடக்கும் உருளைகிழங்கு*

*ஆண் : ஆட்டோ ராணி ஹாரன கொஞ்சம் அடிச்சி பார்க்கட்டுமா*
*மீட்டர போட்டு சீட்டுல ஏறி ஓட்டி பார்க்கட்டுமா?*
*ஊதுவத்தி ஏத்தி வச்சி சூடம் காட்டட்டா (ஆட்டோ...)*

**இப்பொங்கு தமிழ் பாடலுக்குச் சொந்தக்காரர் திருவரங்கம் தந்த அவதார புருசர் மகாகவி வாலிதான்.**

**இப்போது சொல்லுங்கள்....**

**இவர்களைக் 'காலி' என்பதில் தவறிருக்கிறதா?**

**மருமகன் - மாமியார்**
**மச்சான் - கொளுந்தியாள்**
**மதனி - கொளுந்தன்**

**இக்கவிஞர்கள் விட்டுவைத்திருக்கிற இரண்டே உறவுகள்:**
**அம்மா - மகன்**
**அப்பா - மகள்**

**இதையும் நிறைவேற்றிவிட்டார்களென்றால்**
**இவர்களது பாழும் வயிறு நிறைந்துவிடும்.**

**அகோரப்பசி அடங்கி விடும்.**
**ஆடட்டும் அதுவரை...**

**- பாமரன்**

## அம்மாவும் பிள்ளையும் !

விஜய் நடிக்கும் படங்களின் பாடல்களில் தரம் இருக்கிறதா என்பதை ஜெயின் கமிஷன் விசாரித்து, கண்டுபிடித்து சொன்னால்தான் உண்டு? 'விஷ்ணு' படத்தில் வரும் ஒரு டூயட் 'தொட்டபட்டா ரோட்டுல முட்ட பரோட்டா' என்ற பாடலும் இந்த ரகமே...! விஜய்யே சொந்தக் குரலில் பாடியிருக்கும் இப்பாடலில் ஒலிக்கும் பெண் குரல் ஷோபா சந்திரசேகருடையது. அதாவது அம்மாவும் பிள்ளையுமாக சேர்ந்து ஜோடி (விரச) பாடல் பாடியிருக்கிறார்கள்! அடடா... என்னே தமிழ்க் கலாச்சாரம்?

- *நன்றி:* **'நக்கீரன்' வார இதழ்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு 'போராளி' பற்றி இன்னொரு 'போராளி'

"உங்களால் முடியும் வைரமுத்து. போராளிக்கு வெற்றியென்று ஒன்றுமில்லை. மூச்சு நிற்கும் வரை போராட்டம்தான்; தொடர்ந்து யுத்தம்தான். வைரமுத்து நீங்கள் ஒரு போராளி என்பதை நான் அறிவேன். தொடர என் வாழ்த்துக்கள்"

*என்றென்றும்*
*அன்புடன்*


**பாலகுமாரன்**

('நேற்றுப் போட்ட கோலம்' முன்னுரையில்)

(உலகெங்கிலும் உள்ள உண்மைப் போராளிகள் எம்மை மன்னிப்பார்களாக.)

www.tamilarangam.net

# வடுகபட்டி வக்கிரமுத்துக்கு...!



குட்டுமார்னிங்குங்கோ...

மொதல்லயே சொல்லீர்றேன். நான் கவிஞனில்லை. உங்கள மாதிரி பொறநானூறு, அகநானூறு, அதென்ன... கமண்டலகேசி, வணங்காபதி எல்லாம் கரைச்சுக் குடிச்சவனில்லை நானு. சின்ன வயசுல இருந்தே கோனார் தமிழ் உரை படிச்சு வளர்ந்த சாதிங்க... நம்முளுக்கு தெரிஞ்சதெல்லாம் பால்கணக்கும், மோர் கணக்குந்தாங்க... அப்பப்ப பாட்டு கேட்பேன். ஏதோ நாலஞ்சு பசங்க சேந்தா உங்கள மாதிரி நாலு பெரிய மனுசங்க எழுதுன கவிதை புஸ்தகங்களை படிக்கச் சொல்லி கேட்டுக்குவனுங்க. சுருக்கமாச் சொன்னா படிச்ச தற்குறிங்க... இதெல்லாம் ஏன் சொல்றேன்னா.. என்னையும் உங்க எதிரின்னு நெனச்சுக்கிட்டு உடனே பேனாவத் தூக்கி, ''பிரிய எதிரிகளே!''ன்னு எழுத ஆரம்பிச்சற வேண்டாங்கறதுக்காகத்தான்...

www.tamilarangam.net

நீங்க மொதல் மொதல்ல எழுதுன ''இது ஒரு பொன் மாலைப் பொழுது'' பாட்டிருக்கே பாட்டு... அதுதாங்க ஒரிஜினல் தமிழ் பாட்டு. அப்பெல்லாம் வானத்தப் பார்த்தாலே உங்க முகந்தாங்க ஞாபகத்துக்கு வரும்.

*''வானம் எனக்கொரு போதிமரம் நாளும் எனக்கது சேதிதரும்...''*னு

அதுல வர்ற வரிகளை அப்படியே நெனச்சபடி படுத்திருப்பேன். ''உன் பைய்யன் வானத்தையே மணிக்கணக்கா பாத்துட்டு படுத்திருக் கறதுக்குப் பதிலா பாடப் புஸ்தகத்தப் பாத்தான்னாலாவது உருப்படு வான்...''ன்னு சொல்லுவாரு அப்பா. அப்ப எல்லாம் ஊருக்குள்ள ''வானம் பாத்த வாத்தியார் பையன்'' வீடு எதுன்னு கேட்டாலே போதும்... டக்குன்னு கொண்டாந்து விட்ருவாங்க நம்மகிட்ட. அது ஒரு ஸ்பிரிங் சீசனுங்க.

இருந்தாலும் பாருங்க...
இது இந்த சனங்களுக்குப் புரியவே மாட்டேங்குது...

எங்க ஊர்ல அலர்ற...

*''எரிமலை எப்படிப் பொறுக்கும்*
*நம் நெருப்புக்கு இன்னுமா உறக்கம்...''*கிற

பாட்ட வெச்சுதான் மே தினம் வந்தாச்சுங்கிறதையே தெரிஞ்சுக்கு வோம். நீங்க வளர்ந்து வந்த காலத்திலேயே எங்க ஊர்ல உங்க ''பிரிய எதிரிக'' நெறையப் பேரு இருந்தாங்க. அப்பெல்லாம் உங்களப்பத்தி எது பேசுனாலும் விட்டுக்குடுக்க மாட்டனுங்க. எனக்குத் தெரியும் அதுல பல பேரு தனக்கு வாய்ப்பு வர்லயேங்கறதுக்காக வயுத்தெரிச்சல் பட்டவனுங்க. 'நிழல்கள்' படத்துல ஆரம்பிச்ச உங்க வளர்ச்சி வாயு வேகத்துல போனப்ப மனசார சந்தோசப்பட்ட சனங்கள்ல நானும் ஒருத்தனுங்க.

இருந்தாலும் பாருங்க...
இது இந்த சனங்களுக்குப் புரியவே மாட்டேங்குது...

கொஞ்ச நாளைக்கி முன்னாடி உங்க ''பிரிய எதிரிக'' சிலரு எதிர்ல வந்தாங்க... நமக்கெதுக்கு வம்புன்னு சைக்கிளத் திருப்புனங்க... ஆனா... அவனுங்க விடலை... ''வாப்பா... அரை வேக்காடு... எங்க ஆளையே காணோம்''ன்னு குசலம் விசாரிச்சிட்டு... ''அப்புறம் எப்படி இருக்காரு உங்க வடுகபட்டிக்காரரு''ன்னு கேட்டாங்க. நானும் எதார்த்தமா அவருக்கென்ன கொறை... ராஜாவாட்டம் இருக்கறாருன்னேன். ''இப்பவும் உங்காளு கவிதையெல்லாம் கேக்கறயா...? சினிமாவுல உங்காளுதான் தூள் கிளப்புறாரு

www.tamilarangam.net



> ''பெண்கள் இடும் கோலங்களில்
> புள்ளிகள்
> சிறைப்பட்டிருப்பது போலவே
> அந்தப் புள்ளி மயில்களும்
> சிறைப்பட்டிருந்தன''.
>
> **-'போராளி' வைரமுத்து**

**போலிருக்கு..''ன்னு மெதுவா ஆரம்பிச்சாங்க. அது தெரியாம வாயுடப் போயி வம்புல மாட்டிட்டனுங்க.**

**'வானமே எல்லை'ங்கிற படத்துல உங்காளு எழுதின ''கம்பங்காடு'' பாட்டக் கேட்டியா?ன்னாங்க. ஆமா அதுக்கென்ன இப்போன்னு கேட்டேன்.**

**''அதெல்லாம் ஒரு பாட்டாய்யா...?''**

*''கம்பங்காடு கம்பங்காடு*
*காளையிருக்கு பசியோடு*
*ஓடி வந்து உறவாடு*
*வேலி இல்லை விளையாடு...''*-**ன்னு**

**இப்படிப் பச்சையா எழுதியிருக்காரே உங்காளு...''ன்னாங்க.**

**நான் சும்மா விடுவனா?...**

**அது டி.வி.ல ''வயலும் வாழ்வுக்கும்'' எங்காளு எழுதுன பாட்டு. அத 'இயக்குநர் எவரெஸ்ட்' கே. பாலசந்தர் கெஞ்சி கேட்டாரேன்னு எங்காளு பெருந்தன்மையா குடுத்திட்டாரு. எங்காளு சினிமாவப் பத்தி எவ்வளவு கிளீயரா சொல்லியிருக்காரு தெரியுமா...? சும்மா பேச வந்துட்டீங்க...**

*''எதார்த்தம் என்பது என்ன?*
*இவர்கள் திரையில்*
*அடிக்கடி காட்டும்*
*அக்குள் அழுக்கு மட்டும்தானா...''*-**ன்னு**

**சினிமாக்காரங்கள பொட்டுல அடிச்ச மாதிரி கேட்டுருக்காரு அவரப் போயி...**

**''ஆமா... ஆமா... அக்குள் அழுக்க எழுதுன உங்காளுதான் அதே பாட்டுல**

www.tamilarangam.net

*ஆ : எதுக்கு பொண்டாட்டி என்ன சுத்தி வப்பாட்டி*
*எக்கச்சக்கம் ஆகிப்போச்சு கணக்கு*
*பள்ளிக்கூடம் போகையிலே பள்ளப்பட்டி ஓடையிலே*
*கோக்குமாக்கு ஆகிப்போச்சி எனக்கு*
*இத குத்தமுன்னு சொன்னா அவன் கிறுக்கு*

**படம் : கிழக்குச் சீமையிலே - 'பேரரசி' வைரமுத்து**

*''அழுக்குத் தீர்ந்திட குளிப்பாயா*
*ஆசை தீர்ந்திட அணைப்பாயா*
*இரண்டு கை தொட்டு எடுப்பாயா*
*எடுத்த காரியம் முடிப்பாயா...''***-ன்னு**

**எழுதீருக்காருய்யா.**

**காளை மாடு குளிச்சுதா இல்லையான்னு உங்க கவிஞருக்கு எவ்வளவு கவலை பாத்தியா''ன்னு நாக்கப்புடுங்கற மாதிரி கேட்டுட்டானுங்க. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல. நான் உங்காளு அவ்வளவு சீக்கிரம் ஜகா வாங்கீருவனா?**



*''என் பிரிய எதிரிகளே!*
*நெஞ்சில்*
*முட்செடிகளை வைத்துக் கொண்டு*
*நாக்கில் மட்டும் எப்படி*
*நந்தவனம் வளர்க்கிறீர்கள்...''***ன்னு**

**போட்டேன் ஒரு போடு. அவனவன் கேட்ட கேள்வியவே உட்டுட்டு யோசிக்க ஆரம்பிச்சுட்டான். நானும் இதுதான் சமயம்னு சைக்கிளைக் கெளப்பீட்டுப் பறந்திட்டேன்.**

**நீங்க கவியரசர்...**
**இல்லையில்லை பேரரசர்...**
**எனக்குப் புரியுது.**

www.tamilarangam.net


இருந்தாலும் பாருங்க...
இது இந்த சனங்களுக்குப் புரியவே மாட்டேங்குது...

ஏதோ அந்த நேரத்துக்கு அவுங்க வாயை அடைக்கிறதுக்காக உங்க கவிதை வரியவே எடுத்து விட்டுட்டு வந்தேனே ஒழிய எனக்கே என் பதில் திருப்தியா இல்லீங்க. ''பாலச்சந்தர்தான் ஒரு மார்க்கமான ஆளு. அவரு சொந்தப்படம்னா 'பலான' மாதிரி எடுப்பாரு. அவரே இயக்கறதுன்னா 'பத்தினித்தனமா'' எடுப்பாரு''ன்னு ஏற்கனவே நிறையப் பேரு சொல்லீருக் காங்க. ஆனா நம்ம கவிஞரு அப்படிப் பண்ண மாட்டாருன்னு நெனச்சுக் கிட்டே தூங்கிட்டேன்.

இடையில ஏகப்பட்ட வேலைங்க... ''புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே''ன்னாராம் அப்பர்ங்கிறவரு. நம்மளப் பொறுத்த வரைக்கும் உங்க பாட்டைக் கேக்காத நாளெல்லாம் பிறவா நாள்தான்னு நெறைய தடவை நெனச்சிருக்கேன். ஆனா... அன்னாடங்காய்ச்சிகளுக்கு அதுக்கெங்கே நேரங்கெடைக்குது? அதுனால கொஞ்ச நாளா 'டச்' உட்டுப் போச்சுங்க. மகாகவி நீங்க. பெரிய மனசு பண்ணி என்னை மன்னிச்சு ருவீங்கன்னு எனக்குத் தெரியும்.

போன மாசம் என் மச்சினனுக்குக் கல்யாணம்னு பத்திரிகை வெக்கப் போயி அந்த வெவகாரம் புடிச்ச பசங்க கிட்ட மறுபடியும் வசமா சிக்கீட்டனுங்க... யாருங்கறீங்களா...?

அதான்... உங்க முதுகுல முகவரி எழுதீட்டுப் போன உங்க ''பிரிய எதிரி''க கிட்டதான்...



''இந்த சினிமா மயில்கள்
கலாபம் விரித்து
நிழல் கொடுக்கும் என்று நினைத்தோம்!
ஆனால் - அவையோ
நம் ஓய்வு நேரங்களின் மேல்
எச்சமிட்டு விட்டன.
சினிமா!
எவ்வளவு அற்புதமான ஆயுதம்!
நமக்கு அதில்
முதுகு சொறியத்தான் சம்மதம்!''

- 'போராளி' வைரமுத்து

www.tamilarangam.net

கல்யாணப் பத்திரிகையை வாங்குன கையோட என்னப் பார்த்து... ''முத்தம் தர ஏத்த இடம் முகத்துல எந்த இடம்...''ன்னாங்க....ம்... அதப்போயி ஏன் எங்கிட்ட கேக்கற... உன் பொண்டாட்டியக் கேளு... சொல்லுவா...ன்னேன். ''யோவ் லூசு! நாங்க கேக்கல உங்க கவிஞரு கேக்கறார்ய்யா...''

யாரு நம்ம கவியரசரான்னேன்.

''ஆமா. அதே அரசருதான்... 'ஜெய்ஹிந்த்'ங்கிற படத்துல... பாட்டக் கேட்டியா?''

நம்ம 'கப்பலோட்டிய தமிழன்', 'வீரபாண்டிய கட்டபொம்மன்' மாதிரி இப்ப 'செய்கிந்து'ன்னு வேற ஒரு தேச பக்தி படம் வந்திருக்கான்னு கேட்டேன்.

''அது தேச பக்தி படமில்லையா... தேக பக்தி படம். அதுலதான் உங்காளு பிச்சு ஒதறிட்டார்''ன்னாங்க.

யோவ்... இப்ப என்ன எழுதீட்டார்ன்னு இந்தக் குதி குதிக்கறீங்க. எங்க கவிஞரு வெறும் கவிஞரு மட்டுமில்ல. பெரிய ஆராய்ச்சியாளரு மாக்கும்...

*''அடுத்த கிரகங்களின் ஆராய்ச்சியில்*
*இறங்கி விட்டோமே*
*பூமியில் எல்லாம் பார்த்தாகிவிட்டதா?''*-ன்னு

சகலமானவரையும் சரமாரியா கேக்குறாரு.

*ஆ : ஏய்... மசாலா அரைக்கிற மைனா -*
*ஒம் மத்தாளம் என்ன விலை*
*மாராப்பு வழுக்குற மயிலே - ஓம்*
*மல்லியப்பூ என்ன விலை*
*நீ பொறந்த தேதியில் அடியே எனக்குப்*
*புத்தி மாறிப்போச்சு!*
*நீ சமைஞ்ச தேதியில் அடியே எனக்குத்*
*தூக்கம் தொலஞ்சி போச்சு!*
*ஆமா தூக்கம் தொலஞ்சி போச்சு!*
- படம் : சீவலப்பேரி பாண்டி - 'பேரரசி' வைரமுத்து

www.tamilarangam.net

''செல்லப்பிள்ளையே!
வர்ணக் கனாக்களின் வாரிசே!
உன் கண்ணில் மையையும்
நெஞ்சில் கரியையும்
ஒரே நேரத்தில் பூசுவார்கள்!
ஒப்புக்கொள்ளாதே.
ஒரு சிலர்
உன் கடிகாரங்களுக்குக்
கடிவாளம் இடுவர்!
வேறு சிலர்
உன்
நாற்றங்கால்களில்
களைகளை விதைப்பர்!
இறுதியில் ஒன்று...
எனது கவிதையை
எவரேனும்
உனது பாஷையில்
உனக்கு
மொழி பெயர்த்துச் சொன்னால்
எனது ஆனந்தம்
இன்னும் அர்த்தப்படும்''



– **'போராளி' வைரமுத்து**

**ஏதோ நம்ம கவிஞரோட ஆராய்ச்சியில ஒரு சந்தேகம் வந்திருக்கு... அதுதான் ''முத்தம் தர ஏத்த இடம் முகத்துல எந்த எடம்னு கேட்டிருக்காரு... உனக்குத் தெரிஞ்சா தெரியும்னு சொல்லு. இல்லாட்டி ஆள விடுன்னு புடுச்சேன் ஒரு புடி. ஆனா அவனுங்களும் விடாம... ''ஆமா தமிழ்நாட்டு பப்ளிக் சர்வீஸ் கமிசன் பரீச்சைல கேட்க வேண்டிய கேள்வி இது. உங்க கவிஞருக்கு இது மட்டுமா ஆராய்ச்சி... இன்னும் நெறைய...**

*''கிச்சு கிச்சு மூட்டும் இடம்
கிளிப்பொண்ணே எந்த இடம்?
எந்த இடம் சேலை நிக்காதோ
அர்ச்சுனா அந்த இடம்...''*

**அவ்வளவுதானா..**

**''யோவ் நட்டு இன்னுங்கேளு...''**

*''பார்வைக்கு ஏத்த இடம்
பாவையே எந்த இடம்?
எந்த இடம் சூரியன் பார்க்கலையோ
அன்பரே அந்த இடம்...''*

**சரி...சரி... போதும் நிறுத்துங்கன்னு நானே சொல்ல வேண்டி வந்துருச்சு கவிஞரே.**

**எனக்கே ஒரு மாதிரி ஆயிருச்சுன்னா பாத்துக்கங்களேன்.**

**என்னடா... இது...**

www.tamilarangam.net

**செல்லப் பிள்ளைக்கு 'போராளியே' மொழி பெயர்த்துச் சொன்னது:**

*பெண் : ஆடிப்பாரு மங்காத்தா என்னை ஆடச் சொன்னது கல்கத்தா*
*ஆட்டின் ஆறு ஜெயிச்சாச்சா*
*சிறுவன்: ஜாக்கி எடுத்து வை ராஜா எடுத்து வை ஏஸ் எடுத்து வை...*
*என்னென்ன நம்பர் வேணும் என்னை கேளடி சும்மா*
*எதுவும் தருவேன் அம்மா...*
*நம்பர்கள் சதி செஞ்சா நண்பர் மேல் தப்பேது*
*இது போலே ஆட்டம் ஆடி இந்தியாவின் கடன் தீர்ப்பேன்*
*சொந்தத்தில் ராக்கெட் வாங்கி*
*சொர்க்கம் சென்று விலை கேட்பேன்*
*பொன் கூண்டை விட்டு நான் வானம் வந்த பட்சி*

படம் : மே மாதம் - **'போராளி' வைரமுத்து**

வேலில போன டயனோசர எடுத்து வேட்டி மேல உட்ட கதையாப் போச்சு நம்ம கதைன்னு நானே நெனைக்க ஆரம்பிச்சுட்டேன்.

ஆனாலும் நீங்க பெரியவரு. எதையும் யோசிக்காம செய்யமாட்டீங்க. ஒரு கடுதாசி எழுதறது கூட உங்களுக்கு ''தலைப்பிரசவம்'' ஆன மாதிரிதான்னு எனக்குத் தெரியும்...

இருந்தாலும் பாருங்க...
இது இந்த சனங்களுக்குப் புரியவே மாட்டேங்குது

சரி. அதெல்லாம் கெடக்கட்டும். நீங்க மச்சினன் கல்யாணத்துக்கு வந்து சேருங்கன்னு சொல்லீட்டு நடையக் கட்டப் பார்த்தேன். ஆனா... உங்க ''பிரிய எதிரிக'' உடும்புப் புடியா புடுச்சுட்டானுக.

''உங்க கவிஞரு வடுகபட்டியில இருந்து வண்டி ஏறுனப்போ எவ்வளவு வைராக்கியத்தோடு வண்டி ஏறியிருப்பாரு..

*''பட்டுவேட்டி பற்றிய*
*கனாவில் இருந்தபோது*
*அவன்*
*கட்டியிருந்த கோவணமும்*
*களவாடப்பட்டது..''*-ன்னு

எவ்வளவு கருத்தாழமா எழுதுனாரு. ஆனா இன்னைக்கு... அவருக்கு பட்டு வேட்டி கெடச்ச உடனே நாங்க கட்டியிருக்கிற கோவணத்தையும் நீங்க

www.tamilarangam.net

களவாடப்பாக்குறாரே! இது நியாயமான்னு கேக்குறாங்க.

நான் சொல்றேன்னு கோவிச்சுக்கக் கூடாது... அவுங்க சொல்றதுலயும் ஓரளவு உண்மை இருக்குதோன்னு தோணுதுங்க கவியரசரே!. நம்ம அரைவேக்காடே இப்படி அல்பத்தனமா கேக்கறானேன்னு கோபப்பட வேண்டாம். எனக்குப் புரியுது. நீங்க பெரிய புரட்சிக்காரருன்னு.

இருந்தாலும் பாருங்க...
இது இந்த சனங்களுக்குப் புரியவே மாட்டேங்குது...

அதென்னவோ அதே படத்துல...

*''கண்ணா என் சேலக்குள்ள*
*கட்டெறும்பு புகுந்துடுச்சு... எதுக்கு?*
*கண்ணே நீ வெல்லமென்று*
*கட்டெறும்பு தெரிஞ்சிருக்கு அதுக்கு*
*எறும்பு செய்யும் லீலை போல்*
*குறும்பு செய்ய வந்தாயோ*
*உள்ளே என்னமோ பண்ண...''*-ன்னு

ஒரு எழவ எழுதீருக்கீங்களாமா...? இந்த லட்சணத்துல பாலகுமாரன்னு ஒரு புண்ணாக்கு உங்கள போராளின்னு வேற சொல்லுச்சாமா...?

இப்புடியும் எழுதறீங்க...

*''பழைய தமிழில் நாரெடுத்து*
*புதிய விஞ்ஞானத்தில் பூத்தொடுத்து*
*இந்த இனத்தின் தோளுக்கு*
*அணிவிக்கிற நாளுக்கு*
*ஏங்குகிறேன்...''*-ணும் எழுதறீங்க.

''தமிழில் என்ன இருக்கிறது என்று கேட்டு ஆங்கிலத்திற்கு வயிற்றை விற்றுவிட்ட அறிவு ஜீவிகளே!
நீங்கள் தமிழை வாசிக்கவுமில்லை; தமிழில் யோசிக்கவுமில்லை.
முற்றிய மரத்தில் வைரம் பாய்ந்திருப்பது போலவே நமது மூத்த மொழியும் வைரம் பாய்ந்திருக்கிறது''.

**- 'போராளி' வைரமுத்து**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இப்படியே தொடர்ந்து இந்த எறும்பு ஆராய்ச்சியில இறங்கீட்டிருந்தீங்கன்னா பழைய தமிழில் நாரெடுக்கவும் முடியாது. புதிய விஞ்ஞானத்தில் பூத்தொடுக்கவும் முடியாது. உங்க பாட்டால... தமிழே நாத்தமெடுத்துப் போயி நாங்களெல்லாம் ஓட்டமெடுக்க வேண்டியதுதான்.

சமீப காலமாக உங்க 'முழி'யே சரியில்லை. உங்களப் பார்த்தாலே 'யோக்கியன் வர்றான்... சொம்பெடுத்து உள்ள வையு'ங்கிற பழமொழிதான் ஞாபகத்துக்கு வருது.

நீங்க 'தோள்'ம்பீங்க...
இல்ல 'வாள்'ம்பீங்க...
திடீர்னு 'தேளே பூந்துடுச்சு'ம்பீங்க...

உங்கள நம்ப முடியாதுங்க உடனே... உங்க பேனாவை... இல்லயில்ல... உங்க தூரிகையைத் தொறந்து...

*''இங்கு*
*எல்லோரிடமும்*
*புகார்ப்புத்தகம் இருக்கிறது.*
*ஆனால் எவனிடமும்*
*நீதிப்புத்தகம் இல்லை''*யேன்னு பொலம்ப வேண்டாம்.

ஆனா... என்ன இருந்தாலும் கவிஞன் கவிஞன்தான்னு மறுபடியும் நீங்க நிரூபிச்சுட்டீங்க.

*'எனக்குத் தொழில் - பாட்டு. கலை- கவிதை.*
*பாட்டில் ஈட்டுகிறேன்.*
*கவிதைக்குச் செலவழிக்கிறேன்.*
*கவிதையால் மட்டுமே*
*வயிறு கழுவுகிற வாழ்க்கையை*
*கவிஞனுக்குத் தமிழகம் வழங்கவில்லை.'*

ஆ : ஊர்வசி ஊர்வசி டேக் இட் ஈஸி ஊர்வசி
ஊசி போல உடம்பிருந்தா தேவை இல்ல பார்மஸி
வாழ்க்கையில் வெல்லவே டேக் இட் ஈஸி பாலிஸி
வானவில் வாழ்க்கையில் வாலிபம் ஒரு பேன்டஸி
ஒலியும் ஒளியும் கரண்ட் போனா டேக் இட் ஈஸி பாலிஸி
ஒழுங்கா படிச்சும் பெயிலா போனா டேக் இட் ஈஸி பாலிஸி

படம் : காதலன் - 'போராளி' வைரமுத்து

www.tamilarangam.net

''வேலையில்லாப் பட்டதாரி இளைஞர்களின் பிரச்சினைதான்
இந்தியாவில் இமயமலையைவிட இரண்டு சென்டிமீட்டர்
உயரமாக இருக்கிறது.
அவர்களையெல்லாம் ஒரேநாளில் உயிர்ப்பித்துவிட முடியும்.
வைக்கோல் போருக்குள் தொலைந்து கிடக்கும் அந்த
வைரங்களை ஒரே பொழுதில் கண்டெடுத்துவிட முடியும்.
சூரியன் கிழக்கே எழுந்து மேற்கே விழுவதற்குள் அத்தனை
பேருக்கும் வேலைவாய்ப்பளித்துவிட முடியும்''.

- **'பேர்ராளி' வைரமுத்து**

ஒருவாசகம்னாலும் திருவாசகம் மாதிரி சொல்றீங்க. நூத்துல ஒரு வார்த்தைங்க.

அதாவது...

*''இடுப்பு அடிக்கடி துடிக்குது*
*லவுக்க எதுக்கடி வெடிக்குது''*-ன்னு

பாட்டெழுதி எங்க வயித்துல அடிச்சு உங்க வயித்த கழுவுவீங்க.

*''இந்த தேசம்*
*ஒரு கனலில்*
*குளித்துக்*
*கரையேற வேண்டும்...*

.................................................................

*அப்போதுதான்*
*பெண்மைக்கு*
*நிரந்தர மரியாதை*
*நிர்ணயமாகும்...''* -ன்னு

கவிதை எழுதி பிராயச்சித்தம் பண்ணிக்குவீங்க.

சுருக்கமாச் சொன்னா...

விபச்சார விடுதி நடத்தி
சம்பாரிச்ச காசுல
கண்ணகிக்குச் சிலை வைக்கிற மாதிரி...
அப்படித்தானுங்க அர்த்தம்?

பாட்டுல ஈட்டி - கவிதைல செலவழிக்கிற உங்க வரவு - செலவு

www.tamilarangam.net

*ஆ : காதுக்கு இனிய ஒலி*
*கன்னியே என்ன ஒலி*
*காதலின் தேசிய கீதம் தான்*
*கண்மணி என்ன ஒலி?*
*பெ : காதுக்கு இனிய ஒலி*
*காதலில் எந்த ஒலி*
*கட்டில்கால் மெல்லக் கிறீச்சிடும்*
*கண்ணனே அந்த ஒலி! - யப்பா*
*ஆ : காதலிக்க நல்ல உடை*

படம் : ஜெய்ஹிந்த். - **'போராளி' வைரமுத்து**

கணக்கே தனி ரகங்க. நீங்க மன்மோகன் சிங்குகிட்டே இருக்க வேண்டிய மகராசன்.

இருந்தாலும் பாருங்க...
இது இந்த சனங்களுக்குப் புரியவே மாட்டேங்குது...

நீங்க ஈட்டுனதையும் செலவு செஞ்சதையும் கணக்குப் பாத்தா... திவாலாகிப் போனது எங்கள மாதிரி திருவாத்தானுங்கதாங்க.

நீங்க 'பிரதாப்' படத்துல எழுதுன...

*''மாங்கா மாங்கா ரெண்டு மாங்கா*
*மார்க்கெட்டு போகாத குண்டு மாங்கா''*

பாட்டக் கேட்டதும் அப்படியே புல்லரிச்சுப் போச்சுங்க.
இது கவிதை. ஏங்க கவிஞரே!
உங்க ஊட்டல பொம்பளைங்க யாரும் கெடையாதுங்களா?
இல்ல... காது சுத்தமாவே கேக்காதுங்களா...?

ஏன்னா...
எங்க ஊட்டுப் பொம்பளைங்க
நாங்க இந்த மாதிரி எழுதுனா
கால்ல இருக்கறதாலதான் கவனிப்பாங்க.
இப்படி எழுதித்தான் உன் வயத்தக் கழுவனுமான்னு
காரித் துப்பீருவாங்க...
அதான் கேட்டேன்...

www.tamilarangam.net

பொழுதுபோக்கு என்னும் போர்வையில்
நம்
கலாசாரத்தைக்
கற்பழித்து விட்டோமா?
ஒரு
தங்க மீனுக்கான தூண்டிலில்
தவளை பிடித்துக்கொண்டிருந்தோமா? - **'போரானி' வைரமுத்து**



**எனக்குப் புரியுது...**
**இப்படியெல்லாம் எழுதாம**
**கல்யாண மண்டபம் என்ன**
**''கக்கூஸ்'' கூட கட்ட முடியாதுன்னு.**

**இருந்தாலும் பாருங்க...**
**இது இந்த சனங்களுக்குப் புரியவே மாட்டேங்குது...**

**நீங்க வாழ்ந்தா போதுங்க... நாங்க எக்கேடு கெட்டா என்ன? சமீப காலமா உங்க ஆராய்ச்சிகளை பாக்குறப்போ பேசாம உங்களுக்கும் ஒரு டாக்டர் பட்டம் குடுத்தா என்னன்னு ஒரு யோசனை தோணுதுங்க. நீங்க கேக்கிற ஒவ்வொரு கேள்வியும் இந்த தமிழினத்த தலைநிமிர வைக்கிற கேள்விங்க. அதுவும் ஐ.நா. சபைல கேக்க வேண்டிய கேள்விங்க.**

*''சோளிக்குள் என்ன இருக்கு?*
*மாராப்பில் என்ன?''*

**இதெல்லாம் பள்ளிக்கூடக் கொழந்தைகளுக்கு பாடமா வைக்க வேண்டிய கேள்வி. என்ன இருந்தாலும் இந்திக்காரனுங்களுக்குத்தான் இந்த சந்தேகம்னா... ''பச்சைத் தமிழரு நீங்க...'' உங்களுக்கும் இந்த நாப்பத்திரெண்டு வயசுல இந்தச் சந்தேகம் வந்திருக்கக் கூடாதுங்க...''**

**போதாக்குறைக்கு...**

*''பாவாடை காற்றில் பறந்தால் நீ*
*என்ன செய்வாய்?*
*பல பேரின் கண்கள் முறைக்கும்*
*வேறென்ன செய்வாய்?*

*பாவாடை காற்றில் பறந்தால்*
*பல பேரின் கண்கள் விழுந்தால்*

www.tamilarangam.net

*பெ: என் இடுப்பு அடிக்கடி புடிக்குது லவுக்க அடிக்கடி வெடிக்குது*
*குழு :ஜிம்கா ஜிம்கா*
*பெ: நெத்தி வேர்வ நிலத்தில் விழ காதல் கொள்வோமா மாமா*
*பழைய பாக்கி கணக்கு பாத்து பைசல் செய்வோமா*
*நேத்து பூத்த முல்லை என் ஆண்மை பாத்ததில்ல*
*இந்த காளை வந்து மேய நான் கம்பங்கொல்லை இல்ல*
*பெ : ஆம்பளைக்கு வேகம் எல்லாம் அற்ப நேரந்தான்*
*அடக்கி வச்ச பொம்பளைக்கு மோகம் வந்தா*
*பொழுது விடியத்தான்*
படம் : கேப்டன் - 'போராளி' வைரமுத்து

*பாவாடை கொண்டு*
*முகத்தை மூடுவேன்''*

**இப்படிப்பட்ட 'ஞானம்'**
**சாதாரண சனங்களுக்கு**
**சுட்டுப்போட்டாலும் வராதுங்க.**

**அடிமைப்பட்டுக் கெடக்குற பெண் இனத்துக்காக இப்படிப்பட்ட ''தீர்வ'' எந்தக் கொம்பனாலயும் தர முடியாதுங்க.**

**இந்த மாதிரி ''அறிவு'' உங்கள மாதிரி**
**''மகா ஞானி''களுக்குத்தான் வருங்க.**



**உங்க ரசிகன்னு தெரிஞ்சு**
**ஏற்கெனவே எங்கள**
**ஊருக்குள்ள செருப்பெடுத்துட்டுத்**
**தொரத்துறானுகங்க.**
**நாங்க எங்கியோ எப்படியோ...**
**எக்கேடோ கெட்டுப் போறோம்...**
**நீங்க**
**பாட்டுல ஈட்டுங்க.**

**இருந்தாலும்...**
**உங்கள நெனச்சாத்தான்**
**பயமா இருக்கு**
**எங்களுக்கு...**

www.tamilarangam.net

வாசம்...
அழுக்கு...
கட்டெறும்பு...
கரப்பான்பூச்சி..
வாளு...
தோளு...
தேளு...
இடுப்பு புடிக்குது...
லவுக்க வெடிக்குது...
பாவாடை பறக்குது...
பள்ளிக்கூடம் தொறக்குது...ன்னு
இப்படி நீங்க எழுதீட்டு இருக்கிறதப் பார்த்தா
மனசுக்கு 'திக்'குங்குது.

சொன்னா கோவிச்சுக்கக்கூடாது...
எதுக்கும்...
ஒரு...
நல்ல டாக்டராப் பாருங்க...

– பாமரன்

www.tamilarangam.net

# பிஞ்சுகளுக்கும் நஞ்சு

இந்தக் கோடம்பாக்கக் கோமாளிகள் ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மழலைகளையும் கடித்துக் குதற ஆரம்பித்தாயிற்று.

சிறுவர்களைச் சீரழிக்கும் செயலுக்கு பச்சைக்கொடி காட்டிய புண்ணியவான் பாலச்சந்தர்தான்.

A for Alamelu

B for Banu

என்று 'புதிய அகராதி'யை சிறுவர்களுக்குப் போதித்தது பாலச்சந்தர்தான். அதுவும் 'மன்மதலீலை'யில் பிஞ்சிலே பழுத்த... இல்லையில்லை... அழுகிய ஒரு பாத்திரத்தின் வாயிலாக.

அச்சிறுவன் SEX = செக்ஸ் என வசனம் பேசுவான். ஒருவேளை அதுதான் கே.பி. டச் போலிருக்கிறது.

சரி, இயக்குநர் சிகரமே இந்த விளையாட்டில் இறங்கிய பிறகு மற்ற சிகரங்களுக்கும் இந்தச் சிந்தனை வராதா என்ன?

பிஞ்சுகளைப் பாழாக்குவதில் பாக்யராஜுக்கு உள்ள பங்கு பெரும்பங்கு. 'முந்தானை முடிச்சில்' பத்து வயதுக்குட்பட்ட சிறுவர்களைப் பாடாய்ப்படுத்தினார் பாக்யராஜ். 'நான் புடிக்கும் மாப்பிள்ளைதான்'' பாடலில் வரும் 'வைர' வரிகள்:

*பெண் :* *மாமான்னு கூப்பிட்டா ஏம்மான்னு கேக்காம*
*தாழ்ப்பாள போடணுண்டோய்...*
*சிறுவன் :* *தாழ்ப்பாளா? அது எதுக்கு?*

.............................................................

*சிறுவன் :* *எல்லாம் சரி பரிமளா*
*முக்கியமான ஒண்ணு உட்டுட்டியே*
*பெண் :* *எதை...?*
*சிறுவன் :* *ஒரு வப்பாட்டி கிப்பாட்டி வைக்காம பாத்துக்கணும்''*

பாட்டெழுதிய புண்ணியவான் : புலமைப்பித்தன்.

www.tamilarangam.net

அடுத்த அவதாரம்: ஷங்கர் (இயக்குநர்) 'ஜென்டில்மேனில்' இந்த ஜென்டில்மேன்

*''சிக்குபுக்கு சிக்குபுக்கு ரயிலு*
*கலக்குது பார் அவ ஸ்டைலு*
*சிக்குவாளா சிக்குவாளா மயிலு*
*அவ ஓகேன்னா அடிதூளு''*-ன்னு

ஒரு சிறுவன் ஆரம்பித்து வைக்க கௌதமியும் பிரபுதேவாவும் 'தூள்' கிளப்புவார்கள். இந்த ஷ் ஷ் ஷ் ஷ் ஷ் ஷங்கருக்கு இருக்கும் வக்கிர புத்திக்கு அகில இந்திய அவார்டு கிடைத்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

இந்தக் கூத்தில் வாலி ''வாலிபர்கள் பாடத்தான் பாட்டெழுதிக் கொடுத்தேன். சிறுவன் பாட அல்ல'' என்று புறமுதுகிடுகிறார். அது சரி வாலி! வாலிபர்கள் ''ஆட்டோ ராணி ஹாரன கொஞ்சம் அடிச்சுப் பாக்கட்டுமா'' என்று பாடுவது மட்டும் எந்த விதத்தில் நியாயமானது?

அடுத்து

படம்- சிந்துநதிப் பூ

*ஆத்தாடி என்ன ஒடம்பு*
*அடி அங்கங்க பச்ச நரம்பு*

*சிறுவன் : இப்போது பாவாடை*
*எப்போது மேலாடை ?*

பாட்டெழுதிய புண்ணியவான் : கவிச்சக்கரவர்த்தி வைரமுத்து

''நுண்கலைச் சிற்பி'' மணிரத்தினத்தின் சிந்தனை இருக்கிறதே... இவருக்கு இருக்கின்ற 'அபார அறிவு' எவருக்கும் இல்லாதது. இவரது 'அஞ்சலி'யில் சிறுவர்கள் பேசும் விஷயங்களே அலாதியானவை. ஒன்று இவரது படத்தில் குழந்தைகளை ஆடவிடுவார் அல்லது கிழவிகளை ஆடவிடுவார்.

விவஸ்தை கெட்ட ரசனை இந்த மனிதனுக்கு.

*சிறுவர்கள் : மொட்ட மாடி மொட்ட மாடி*
*ஒரு லவ் ஜோடி லவ் ஜோடி*

.....................................................

www.tamilarangam.net

*மெல்லத்தழுவி நிற்க*
*மேலாடை நழுவி நிற்க*
*எடுக்கட்டும் கொடுக்கட்டும்*
*தடுக்கலாமா?*
*ஏதோதோ ஆயாச்சு*
*எங்கேயோ போயாச்சு*

**பாட்டெழுதிய புண்ணியவான் : மகாகவி வாலி.**

**அடுத்து அதே மணிரத்தினத்தின் 'பம்பாய்'. இதிலும் பத்துப் பனிரெண்டு வயதேயான சிறுவர்களை வைத்து**

*''குச்சி குச்சி ராக்கம்மா பொண்ணு வேணும்''*

**என்பான் கதாநாயகன். சொந்த பாணி...?**

**இதே மணிரத்தினத்தின் அண்ணன் படமான 'மே மாதத்தில்' கதாநாயகிக்கு சீட்டாடச் சொல்லிக் கொடுக்கும் சிறுவனொருவன் பாடும் பாடல்.**

*சிறுவன் : ஜாக் எடுத்து வை ராஜா எடுத்து வை*
*ராணி எடுத்து வை ஏஸ் எடுத்து வை*
*வை ராஜா வை வை ராஜா வை*
*ஆடிப்பாரு மங்காத்தா*
*என்னை ஆடச் சொன்னது கல்கத்தா*

**பாட்டெழுதிய புண்ணியவான் கவியரசு வைரமுத்து**

**பார்த்திபன் : பற்றி கேட்கவே வேண்டாம்.**

**படம் : உள்ளே வெளியே**

*சிறுவன் : ''அடி மஜாயின்னா மஜாதான்*
*அண்ணன் பேரு கஜாதான்''*

**இப்படம் முழுக்க சிறுவர்கள் சிறுமைப்படுத்தப்படுகிறார்கள்.**

**இளைய தலைமுறை இந்த இயக்குநர்களுக்கு நிறைய 'கடன்'பட்டிருக்கிறது.**

**எப்படித் 'திருப்பித் தருவார்கள்' என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.**

www.tamilarangam.net

உங்கள்
வாரிசுகள்
ACTION சப்பாத்துக்களும்
கசங்காத சீருடைகளுமாய்
காரில் பவனி வரட்டும்
தவறில்லை.

ஆனால்...
கிழிந்தகால்சராயோடு
சேரிகளிலும் குப்பங்களிலும்
சுற்றி வரும்
எமது சிறுவர்களை...

பகட்டோடு
வாழ வைக்க முடியாவிடினும்
பண்போடு வாழவைக்க
விரும்புகிறார்கள் பெற்றவர்கள்.

விட்டுவிடுங்கள் இனியாவது.
பிழைத்துப் போகட்டும் அந்தப்
பிஞ்சுகளாவது.

- பாமரன்

www.tamilarangam.net

# கூரைக்குக் கொள்ளி...

**வா**லியும் வைரமுத்துவும்தான் சகட்டுமேனிக்கு எழுதித் தள்ளுகிறார்கள் என்றால் மற்றவர்கள் எப்படி எழுதுகிறார்கள்?

இடையில் இங்கே ஏகப்பட்ட பட்டிமன்றங்கள்.

கண்ணதாசனா? பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமா?

*ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு*
*ஒரு கோல மயில் என் துணையிருப்பு*

என்று கிடந்த கண்ணதாசன் ஒரு கவிஞனா என்று ஒரு கூட்டம்-

பொதுவுடைமைச் சித்தாந்தங்களைப் பாமரர்களுக்கும் பாடல் வாயிலாய்ப் பரப்பியவன் பட்டுக்கோட்டையே என்று ஒரு கூட்டம்-

கண்ணதாசன் மோசம் என்றால்
இழுத்து வந்து திட்டவும் முடியாது.
பட்டுக்கோட்டை பரவாயில்லையென்றால்
எழுப்பி வந்து பாராட்டு விழாவும் வைக்க முடியாது.

இரண்டுமே இன்றைக்கு உதவாது.
இருவருமே இன்றில்லை.

நிகழ்கால அபாயத்திற்கு இவைகள்
எவ்விதப் பயனையும் தரப்போவதில்லை.

இவைகளும் ஒருவிதத்தில்
கம்பனா? வால்மீகியா?
கண்ணகியா? சீதையா?
ரகப் பட்டிமன்றங்களே.

இனியாவது
இவர்களது பட்டிமன்றங்களை

www.tamilarangam.net

''வாலி - வைரமுத்து வகையறாக்களால்
இன்னமும் நாம்
உதைபடலாமா?
அல்லது இழுத்து வந்து
உதைக்கலாமா?''
என்கிற ரீதியில் வைத்துக் கொள்வது நல்லது.

இன்றைய கவிஞர்கள்
கண்ணதாசனையே விஞ்சிவிட்டவர்கள்.
கண்ணதாசனே பரவாயில்லை
என்று இச்சமூகத்தைச்
சொல்ல வைத்த பெருமைக்குரியவர்கள்.

சரி,
பட்டுக்கோட்டை பாணியில்
பாடல் உலகில்
பவனி வருபவர் யார்?

*''நான் கருங்கல்லுச் சிலையோ*
*காதலெனக்கில்லையோ*
*வரம்பு மீறுதல் முறையோ''*

என்று காதலுக்குக் கண்ணியத்தைக் கட்டிவிடும் கவிஞன் யார்?

ஒன்று நினைவுக்கு வருகிறது...

''உங்க எட்டு பசங்கள்ல எந்தப் பையன் நல்ல பையன்?'' என்று ஒருவர் கேட்டதற்கு ''அதோ... அங்க கூரை மேல ஏறி கொள்ளி வெச்சுக்கிட்டு இருக்கானே அவன்தான்...'' என்றாராம் தந்தை. அப்புறம் மற்ற பையன்களைப் பற்றி கேட்கவா வேண்டும்?

அப்படித்தானாயிற்று நமது நிலையும்.

இனி, கலாச்சாரக் கூரைக்குக் கொள்ளி வைக்கும் கவிக்கூட்டம் பற்றிக் கொஞ்சம்:

குருவிக்கரம்பை சண்முகம்
(நம்புங்கள் - இவர் ஒரு கல்லூரி பேராசிரியர்)

*''பொட்டப்புள்ள ஒத்துவந்தா கட்டாந்தரை பத்தாகும்*

www.tamilarangam.net

பொண்டாட்டி நீதாண்டி வெள்ளோட்டம் வாயேண்டி
நீ இப்ப கொஞ்சாட்டி நான் வைப்பேன் வைப்பாட்டி
மச்சான் இவ பச்ச வாயை எச்சில் ஏதும் செய்யாதே''

(படம் : சின்னவீடு)

**முத்துலிங்கம்**

''எங்கே எங்கே பொட்டி வச்சி
எப்படித்தான் தேய்க்கிறது யம்மா
அங்கே அங்கே பொட்டி வச்சி
சூடு ரொம்ப ஏத்துறியே யப்பா''

(படம் சக்கரவர்த்தி)

**எம். சோமராஜ்**

''சைனா சில்க்குதான் உங்க அக்கா இடுப்புதான்
பர்மா தேக்குதான் இவபாடி ஷேப்புதான்''

(படம் : பவளக்கொடி)

**புலமைப்பித்தன்**

''ஏய் கலா கலா கண்ணடிச்சா கலக்கலா
வா தலா தலா லட்ச ரூபா குலுக்கலா''

**(இப்பாடலுக்கு முன்வரும் வசனமே இப்பித்தனது புலமைக்குச் சான்று.)**

''சரிகமபதநி சைட் அடிப்பேன் கவனி ...
சமத்துப் பொண்ணு இவ
சாந்தி முகூர்த்தத்துக்கு அப்பப்பா...''

**கங்கை அமரன்**

''ரெண்டுல நீ ஒண்ணத் தொடு மாமா
இந்தப் பொண்ணுகிட்ட வெட்கப்படலாமா?''

(படம் : திருமதி பழனிச்சாமி)

''கண்ணத் தொறக்கணும் சாமி கையப் புடிக்கணும் சாமி
இது வானம் பாக்குற பூமி வந்து சேர்ந்து விளைச்சலைக் காமி''

(படம் : முந்தானை முடிச்சு)

www.tamilarangam.net

**பிறைசூடன்**

*''பலான பார்ட்டி நம்ம பார்ட்டி...*
*முன்னால பார்த்தா மூரு மார்க்கெட்...*
*பின்னால பார்த்தா ஷேரு மார்க்கெட்''*

**(படம் : லக்கிமேன்)**

**காளிதாசன்**

*''அட தொட்டா சிலிர்க்குதடா மாமா*
*என்ன தொந்தரவு பண்ணாதே ஆமா''*

**(படம் : பட்டத்து ராணி)**

*''துளசி செடியோரம் தூறல் விழும் நேரம் மாமா*
*கொஞ்சம் உரசிப் பாக்காம கூச்சம் போகாது மாமா''*

**(படம் : கட்டபொம்மன்)**

*''கோரப்பாய விரிச்சுக்கடி*
*உன் கூர புடவைய கசக்கிக்கடி*
*அடி கோழி கூவும் நேரம் வரும்*
*நீ கூத்து கும்மாளம் அடிச்சுக்கடி'*

*''அடி மூடு திரும்புது எனக்கு*
*ஒரு சூடு பறக்குது உடம்பு*
*என் நாடி கொக்கரிச்சி பாடி*
*பக்கடிச்சி கிக்கடிச்சி நிக்குதடி நரம்பு''*

**(படம் : தெற்குத் தெரு மச்சான்)**

**எழுதிய புண்ணியவான் யாரோ?**
**(இது ஒரு புலனாய்வுப் பாடல்...)**

*''மைனர் மைனா உனக்கு மசக்கை ஆச்சு மாசா மாசம் வயிறு பெருசா போச்சு வாயும் வயிறாய் நிக்கறியே இங்கே உன் வயுத்த ரொப்பிப் போனவனும் எங்கே?''*

**போதுமடாசாமி...**
**இப்'பச்சைத் தமிழர்'களது இச்சாதனைப் பட்டியலை**
**இன்னும் நீட்டித்தால் சத்தியமாய்ப் பைத்தியம்தான்.**

**இவர்களில் எவரேனும் ஒருவராவது திருந்தினால்...**
**தங்கள் செயலுக்கு வருந்தினால்...**

www.tamilarangam.net

**தமிழ்கூறும் நல்லுலகம் நன்றிகூறும் இவர்களுக்கு...**
**அல்லது... இவர்களும் நமது வயிற்றிலடிப்பதன் மூலம்தான்**
**"வயிறு கழுவ" முடியுமெனில்...**
**மீண்டும்**
**ஒரு கலாச்சார எழுச்சிக்காக எழ இருக்கும்**
**எம்மக்களை இவர்கள் களத்தில் சந்தித்தே தீர வேண்டும்.**

**ஆங்காங்கே உள்ள எம் தமிழ் மக்கள் மனங்களில்**
**கோபக்கங்குகள்.**

**இக்கங்குகள் கனலாகும்போது...**
**நீங்கள் கந்தலாகிப் போவீர்கள்**
**ஜாக்கிரதை**
**அவ்வளவுதான்.**

**- பாமரன்**

## பாராட்டுகிறோம்

*அண்மையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு பின்னணி பாடகர் திருமதி எஸ்.பி. சைலஜா அளித்த பேட்டியில் - தற்போது வரும் பாடல்கள் தரமற்று இருப்பதனை ஒப்புக்கொண்டதோடு அதற்கு வருந்தவும் செய்தார். அத்தோடு, அவரும் அவரது சகோதரர் திரு. எஸ்.பி. பாலசுப்பிரமணியமும் "இனி இத்தகைய தரமற்ற பாடல்களைப் பாடப்வோதில்லை" என முடிவு செய்திருப்பதாகவும் அப்பேட்டியில் திருமதி சைலஜா கூறினார். இது வரவேற்கத்தக்க முடிவு மட்டுமல்ல - மிகவும் பாராட்டத்தக்க முடிவும் கூட. இவர்கள் இருவருக்கும் தமிழ் மக்களது சார்பாக எமது நன்றிகள். பாராட்டுக்கள். இவர்களைப் பின்பற்றி பிற பின்னணிப் பாடகர்களும், கவிஞர்களும் மனம் திருந்தினால் மிக மகிழ்வோம்.*

www.tamilarangam.net

# விடைபெறும் முன் சில வினாடிகள்...

என்ன சண்டை எமக்கு...
இவர்களோடு?

வாய்க்கால் பிரச்சனையா வாலியோடு...?
வரப்புப் பிரச்சனையா வைரமுத்துவோடு...?

இவர்களது போட்டிக் கவிஞனா நான்?
இல்லை..
பாட்டுக்கட்டும் பாவலனா?
அதுவுமில்லை.

சுட்டுப்போட்டாலும்
கவிதை வராது எனக்கு.
பாட்டும் பழக்கமில்லை எனக்கு.

போட்டியாளர்களுக்குள்
பொறாமை இருக்கலாம்.
ஆனால் இந்தப்
பாதையோரப் பாமரனுக்கு...?

இவர்களின்
எண்ணற்ற பாடல்களில்
எம்மை இழந்திருக்கிறோமே...

''இது ஒரு பொன்மாலைப் பொழுதில்''
வானத்தை வாஞ்சையோடு
வாசிக்க வைத்தது வைரமுத்துதானே?

என்ன சண்டை எமக்கு?

''தமிழன் படைச்சு வெச்ச மெட்டெடுத்து
வடக்கே திருடுகிறான்''
எனக் 'கோலங்களில்' கோலமிட்டிருப்பது
வாலிதானே?

www.tamilarangam.net

எம்மைப் பொறுத்தவரை
நிறைகளை நேசிக்கிறோம்
குறைகளை விமர்சிக்கிறோம்.

அறிவு சொல்லும் வயதா அவர்களுக்கு?
திட்டித்தான் திருத்தவேண்டியவர்களா இவர்கள்?

என்ன சண்டை எமக்கு
இவர்களோடு...?

மருந்துக் கடைக்காரருக்கு
அது வியாபாரம்.
மளிகைக் கடைக்காரருக்கு
அது வியாபாரம்.
பாட்டு வியாபாரிக்கு
அது வியாபாரம்.

முறையான மருந்தைக் கொடுத்ததற்காகவே
மருந்துக் கடைக்காரருக்கு மாலை போட்டு மகுடம்
சூட்டவேண்டுமென்பது
மடத்தனம்.

முன்னர்
முறையான மருந்தளித்தற்காகவே
'காவு' கொண்ட கலப்படத்திற்கும்
'கரிசனம்' காட்ட வேண்டுமென்பது
கடைந்தெடுத்த
பைத்தியக்காரத்தனம்.

அதைப்போன்றுதான்
ஒரு பாடலாசிரியனும்.

இந்தப் பாட்டு வியாபாரிகளால்
நல்ல பாடல்கள்
நமக்களிக்கப்படும் போதெல்லாம்
நாரத கான சபாவில் நின்று கொண்டு
வெண்சாமரம் வீச முடியாது நம்மால்.

அதைப் போன்றே...

www.tamilarangam.net

நாலாந்தரப் பாடல்களால்
நமது சமூகத்தைச் சீரழிக்கும்போது
வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது.

எந்த வியாபாரமும்
எம்மைப் பாதிக்கும்போது
தலையிடுவது தவிர்க்க முடியாததாகிறது.

இப்பாட்டு வியாபாரிகளே
அடிக்கடி ஒத்துக்கொள்வதைப் போல்
"பாட்டு என்பது வர்த்தகம் சம்பந்தப்பட்டது.
எனவே; நாங்கள் சில நெளிவு சுளிவுகளைச்
சந்தித்தாக வேண்டியிருக்கிறது"

ஆம்...
பாட்டு என்பது வர்த்தகம் சம்பந்தப்பட்டது.

முறையான பாட்டு - முறையற்ற பாட்டென்பது
நுகர்வோர் சம்பந்தப்பட்டது.

எந்தப் பாடலையும் அனுமதிக்கவேண்டியதுதான்,
வர்த்தகம் சம்பந்தப்பட்ட வரையறை.

எந்தெந்தப் பாடல்களை அனுமதிக்கலாம் என்பது
நுகர்வோரது நலன் சம்பந்தப்பட்ட வரையறை.

நேற்றைய முனிவன் என்பதற்காக
இன்றைய காமுகனை விட்டுவிட முடியாது.
அதைப்போன்றே
தரங்கெட்ட பாட்டுக்காரனையும்.

ஒரு பிக்பாக்கெட்
ஒரு கலப்படக்காரன்
ஒரு கள்ளச்சாராய வியாபாரி
இவர்களும்
இந்தப் பாட்டுக்காரர்களும் ஒன்றே.
அடிப்படையில் வித்தியாசமொன்றுமில்லை.

இவர்கள் நியாயப்படுத்தும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வயிற்றைக் கழுவும்" வேலைக்காகத்தான்
அவர்களும்
அந்தந்தத் "தொழில்களை"
மேற்கொண்டுள்ளார்கள்.

ஒரு
பிக்பாக்கெட்டுக்குப்
பிடி வாரண்ட்
பிறப்பித்துவிட்டு
ஒரு
பாட்டுக்காரனுக்கு மட்டும்
பாராட்டு விழா என்பது
பாரபட்சமானது.

எந்தப்பாட்டையும் எழுதலாம்
வியாபாரம் பெருக
எந்தப் படத்தையும் தயாரிக்கலாம்
வியாபாரம் பெருக.

அதைப் போன்றே
எந்தெந்தப் பாடலை அனுமதிக்கலாம்
சமுதாயம் சீர்பட....
எந்தெந்தப் படத்தை அனுமதிக்கலாம்
கலாச்சாரம் காக்க...
என்பதை
முடிவு செய்ய வேண்டியவர்கள் மக்கள்.

அறிவுக் குருடர்களே !
மக்கள் வாழ்வது
கோடம்பாக்கத்தில் மட்டுமில்லை.

இக்
'கவி'ப்பயல்கள்
குட்டிக்கரணம் போடுவதில்
கெட்டிக்காரர்கள்

வளமான வார்த்தைகள்
வெளிப்படும்போது
"வார்த்தைத் தவம்" என்பார்கள்

www.tamilarangam.net

வக்கிரமான வார்த்தைகளை
வெளியிடும்போது
'தப்பான தாளங்கள்'
எனத் தாவி விடுவார்கள்.

மெட்டுக்குப் பாட்டே எங்கள்
மெருகுகெடக் காரணம் என்று
புலம்பித் தீர்ப்பார்கள்.

ஜானகிகளின்
முனகல்களைக் கேட்கும்போது
இவர்கள்
முக்கக்கூட முடியாத
முழு ஊமைகளாய்ப்
பிறந்திருக்கக் கூடாதா?
என்ற ஏக்கமே எழுகிறது.

வக்கிரத்தின் வாரிசுகளே!
உங்கள் "இல்லறத்திற்கு" மட்டும்
எதற்குத் தனி அறை?
உங்கள்
பாடல்களைப் போலவே
நீங்களும்
பல்லாவரத்தின்
பிரதான சாலையிலேயே வந்து
படுத்துக்கொள்ள
வேண்டியதுதானே?

"மூட்டை தூக்கும் மாமா
அழகு மானத் தூக்கலாமா.."
என்று
எம் மக்களது
மூட்டை தூக்கும் பிழைப்பிலும்
மண்ணள்ளிப் போடுகிறீர்களே... மூடர்களே!
எம் மக்களை
மூட்டை தூக்கிப் பிழைக்கவாவது
விட்டு வையுங்கள்.

www.tamilarangam.net

எவனடா
எழுதச் சொன்னான்
உங்களை...?

சமைஞ்சதையும்
குனிஞ்சதையும்
குறிப்பிட்டேயாக வேண்டும்
என்று
எந்த தமிழனடா
உங்கள்
வீட்டு வாசலில்
உண்ணாவிரதம்
இருந்தான்?

சுற்றி வளைக்காமல்
சுருக்கமாகச்
சொல்கிறோம்:

காலிகளுக்கு
எதற்கடா
'கவிஞர்' பட்டம்...?

த்தூ....!

- பாமரன்

www.tamilarangam.net

# பெண்

*பெண்...*

*இந்தச் சொல்*
*சங்க காலத்திற்கு முன்பிருந்து*
*ஒரு பண்டமாகவே*
*பார்க்கப்பட்டு வந்திருக்கிறது*

*பெண்...*

*இந்தச் சொல்*
*நாட்டுப்புறப் பாடல்கள் முதல்*
*'நவீன' பாடல்கள் வரைக்கும்*
*ஒரு போகப் பொருள்.*

*பெண்...*

*இந்தச் சொல்*
*பற்பசையிலிருந்து*
*பீரங்கி வரைக்கும்*
*விளம்பரத்திற்கான*
*விஷயம் மட்டுமே.*

*பெண்...*

*இந்தச் சொல்*
*மார்பு,*
*தொப்புள்,*
*பிறப்புறுப்பு*
*அவ்வளவே.*

*இவையெதுவுமில்லை*
*அவள் ஓர்*
*உயிர்...*
*உயிர்...*
*உயிர்...*
*உன்னையும் என்னையும் போலவே.*

**-பாமரன்**

www.tamilarangam.net

# இந்நூல் ...

## சென்னை

வே.மதிமாறன் - பத்திரிகையாளர், தீஸ்மாஸ் டி.சில்வா - பத்திரிகையாளர், நெடுஞ்செழியன், வே. இளங்கோ, முத்துராமலிங்கம் - பத்திரிகையாளர், மைக்கேல் - பத்திரிகையாளர், வெ. ராஜன், வவுனியன் - பத்திரிகையாளர், திருமதி. பானுமதி, பீட்டர் - எழுத்தாளர், ஜோசப் ராஜ் - பத்திரிகையாளர், வெ. பாலாஜி, இல. திருப்பதி, வலியுதீன், நீலகண்டன், வால்த்தூஸ், நீ. இராசேந்திரன் - விஜி கிராபிக்ஸ்.

## கோவை

த.மு. செந்தில்குமார், சுரேஷ் பாபு, சேந்தனமுதன், ஜெ. இராம்குமார், குமரேசன், திருமதி. இந்திரா திருவேங்கடசாமி, ராஜா ஒலிப்பதிவகம், வசந்த் மியூசிகல்ஸ், த. சிவக்குமார், ம.பெ. நடராசன், யதார்த்தன், மா.பாலாஜி, அருண், சாந்தி, பிளாரன்ஸ் பிலோமின் ராஜ், ராஜராஜன், ரமேஷ், தே. சிவக்குமார், குமணன், பி. செந்தில்குமார், யு.ஆர்.நவநீதகிருஷ்ணன், ரவிக்குமார், கே.பி.சீனிவாசன், எம். கார்த்திகேயன், வே. சிதம்பரம், வெ.கோபாலகிருஷ்ணன், சத்தீந்தர், கலைச்செல்வன், நா. திருவேங்கடசாமி, பி. ஹேமலதா, கார்த்திகேயினி, ஜெயசுதா, மனோன்மணி சிவக்குமார், சசி, செல்வராசு, இரத்தினம், த. சரவணன், ராஜேஸ்வரி சண்முகசுந்தரம், எ. சேகுவேரா.

வெங்கட் - திருப்பூர், சந்திரன் - அமராவதி நகர், முருகேசன் - நவாவூர், விசுவநாதன் - செஞ்சேரிமலை, கு. பழனிசாமி - செஞ்சேரிமலை, இரா. உதயகுமார், அழகேசன், இரா. ராஜேஷ்குமார் - பெரியநாயக்கன் பாளையம்.

www.tamilarangam.net

# நீலகிரி

ஆ. ரமேஷ், எஸ். கண்ணன், அமுதன், ராஜசேகர், வசந்த் குமார், சுரேஷ், நந்தகுமார் - குன்னூர், பி.கெ.தர்மராஜ், விஜயகுமார் - உதகை

●

பிந்துமாதவ் - பம்பாய்; பிரேமதாஸ் - திருச்சி; சின்னப்பாண்டி, சூரியச்சுடர் - மதுரை, செந்தமிழ் - பாளையங்கோட்டை; மோ. அருண்குமார் - சத்தியமங்கலம்; ; ஆவுடையப்பன் - தென்காசி; கு. முகம்மது மீரான் - பழனி; சோமசுந்தரம், சி.எஸ். சிவக்குமார், உமா - மடத்துக்குளம்; சாரதா - மேட்டுப்பாளையம்; த.கோபி - பெரியகுளம்; ஈஸ்வரன் - விக்கிரமசிங்கபுரம்; மு. செந்தமிழ்ச்செல்வன் - ஆம்பூர்; மா. இளங்கோவன் - கிருஷ்ணகிரி; கோப்பெருந்தேவி - கிருஷ்ணகிரி; ; ஜெயராஜ் சார்லஸ், பிரபு - தூத்துக்குடி; பாண்டியன் - உசிலம்பட்டி; செல்வராஜ் - வத்தலக்குண்டு; கு. ஜெயக்குமார் - ஜோதிபுரம்; நா. ராசா - சிவகாசி; சந்திரன் - கோவில்பாளையம்; மானா. பாஸ்கர் - பத்திரிகையாளர் - திருவாரூர்; உஷாராணி - உடுமலைப்பேட்டை; சுந்தரம் - சரவணம்பட்டி; சோ. செந்தில்குமார், ராமராஜன் - பெங்களூர்;

●

தினேஷ்குமார் - மஸ்கட், ந. முரளிதரன் - சவுதி அரேபியா; சுந்தர் - பிலடெல்பியா - அமெரிக்கா; சு. சொக்கலிங்கம் - நெபுராஸ்கா - அமெரிக்கா; முருகதாஸ் - கனடா.

## = இவர்களின்றி சாத்தியமில்லை =

www.tamilarangam.net

# சமர்ப்பணம்

www.tamilarangam.net

இன்னமும்
உப்புக்கருவாடும் ஊறவெச்ச சோறுமாய்
போரில் சாகாது மாரில் சாகத் துடிக்கிற
எங்கள்
கவிப்பேரரசர்கள்
கவிச்சக்கரவர்த்திகள்
கவிமன்னர்கள்
கவிக்குறுநிலமன்னர்கள்
அனைவருக்கும்...

